வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 24.12.2022 சனிக்கிழமை இதழ் : 15 பக்கங்கள் : 16




## பட்டினியால் வாடிய சிறுவன் மூதூரில் பரிதாபமாக மரணம்

### மனதை நெகிழவைக்கும் துயரம்

மூதூர், டிசெ. 24

மிகக் கொடிய வறுமையால் பட்டினியால் வாடிய சிறுவன் போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். இந்தத் தகவலை அந்தப் பகுதியின் சுகாதார தரப்பினர் உறுதி செய்துள்ளனர்.

மூதூர் - 64ஆம் கட்டை - சகாயபுரம் கிராமத்தில் உள்ள மாணிக்க விநாயகர் ஆலயத்துக்கு பின்புறமாகவுள்ள வீதியில் குடியிருக்கும் வைரமுத்து ராமராஜன் என்ற சிறுவனே பட்டினியின் கொடுமையால் உயிரிழந்தார்.

15

## 16 அரசியல் கைதிகளின் வழக்கை விரைவாக நிறைவுறுத்த உத்தரவு!

### நீதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 24

சிறையிலுள்ள 16 அரசியல் கைதிகளின் வழக்குகளை விரைவாக விசாரணைக்கு எடுத்து அவற்றை நிறைவு செய்யுமாறு நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளேன் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாரதூரமான - உணர்வுபூர்வ

15

# அரசாங்கத்துடனான பேச்சில் இந்திய அனுசரணை தேவை!

## ரெலோ தலைவர் செல்வம் வலியுறுத்து

- நிலம் விடுவிக்கப்படாவிடின் பேச்சில் அர்த்தமில்லை
- உலக நாடுகளின் மேற்பார்வையும் அவசியம்

மன்னார், டிசெம்பர் 24

ஜனாதிபதியால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள தமிழர்களின் இனப்பிரச்னைக்கான பேச்சு இந்தியாவின் அனுசரணையிலும் உலக நாடுகளின் மேற்பார்வையிலும் நடைபெற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

15



### எல். பி. எல். இருபது - 20:

## யாழ்ப்பாணம் கிங்ஸ் 'ஹட்ரிக்' சம்பியன்!

கொழும்பு, டிசெ. 24

யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாகவும் எல். பி. எல். - 20 தொடரின் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

நேற்று கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நடந்த இறுதிப்

15

## நாயுடன் புணர்ந்தாராம் ஜனாதிபதி ஆலோசகர்

### படங்களை வெளியிட்டார் ஹிருணிகா



கொழும்பு, டிசெ. 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகர் பேராசிரியர் ஆஷூ மாரசிங்க இயற்கைக்கு மாறாக நாயை புணர்ந்தார் என்று சாடிய ஹிருணிகா பிரேமசந்திர, அது தொடர்பான படங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

ஹிருணிகா பிரேமசந்திர நேற்று ஊடகங்

15

## இனப் பிரச்னைக்கு தீர்வு கோட்டாபய வரவேற்பு!

கொழும்பு, டிசெ. 24

அரசியல் தீர்வைக் காணும் நோக்குடன் தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வகட்சிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ள பேச்சை வரவேற்கின்றேன் என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நான் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் தமிழ்க் கட்சிகளுடன் பேசி அரசியல் தீர்வை விரைந்து காணத் திட்டமிட்டிருந்தேன். ஆனால், அது கைகூடவில்லை.

15

## ஐஸ் போதை வைத்திருந்தால் மரண தண்டனை உறுதி!

### நீதி அமைச்சு மீண்டும் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 24

5 கிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருப்பவர்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை உறுதி என்று நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளில் மொத்த எண்ணிக்

15

## திருத்தப்பட்ட வருமானவரி ஜனவரி முதல் நடைமுறை!

கொழும்பு, டிசெ. 24

புதிய தனிநபர் வருமான வரி திருத்தம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று நிதி அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

சகல சீர்திருத்தங்களையும் முன்னெடுப்பதற்கு இதுவே சிறந்த சந்தர்ப்பம் என அரசாங்க நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கபில சேனாநாயக்க கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்தார்.

சம்பள வகைகளுக்கு ஏற்ப தனி

15

## அம்புலன்ஸ் மோதி ஒருவர் உயிரிழப்பு!

### மாங்குளத்தில் சோகம்

கிளிநொச்சி, டிசெ. 24

நோயாளரை ஏற்றிக்கொண்டு சென்ற அம்புலன்ஸுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் மாங்குளம் - செல்வபுரம் பகுதியில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது. இதில், கிளிநொச்சி கனகாம்பிகை குளத்தை சேர்ந்த கந்தசாமி சுப்பிரமணியம் என்பவரே உயிரிழந்தார்.

15

## வியட்நாமிலுள்ள தமிழர்கள் நாடு திரும்புவதற்கு விருப்பம்!

கொழும்பு, டிசெ. 24

கனடாவுக்கு சட்டவிரோதமாக படகு மூலம் செல்ல முயன்று, படகு பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்டு வியட்நாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 302 இலங்கையர்களில் 152 பேர் மீண்டும் இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் 152 பேரும் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு (ஐ. ஓ. எம்.) செய்து வருகிறது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

15

## யாழ். - காரைக்கால் கப்பல் சேவை இரண்டு மாதங்கள் தாமதமாகும்!

04

## இப்படியும் நடக்கிறது...!

கடந்த பதின்மூன்றாம் திகதி நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு முன்னதாக பாராளுமன்றத்தில் வைத்துத் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஒவ்வொருவராக ஜனாதிபதி தனித்தனியாக சந்தித்திருந்தமை பற்றி ஏற்கனவே இந்தப் பத்தியில் பார்த்திருந்தோம்.

அவ்வாறு அவர் சந்தித்தபோது ஒரு தலைவருடன் கூட்டமைப்பின் தலைமை எதிர்காலத்தில் யாரிடம் இருக்கும் என்பது பற்றியும் பிரஸ்தாபித்திருந்தார்.

சம்பந்தனுக்கு பின்னர், இன்னுமொருவர் தலைவராக வருவதற்கு மற்றுமோர் எம்.பி. விடமாட்டார் போல இருக்கின்றதே என்று ஜனாதிபதி ரணில் கூறியிருந்தமை பற்றி இந்தப் பத்தியிலும் குறிப்பிட்டிருந்தேன்.

அவர்களில் ஒருவருக்கு கொழும்பில் அரசியல் கட்சிகள் மத்தியில்தான் செல்வாக்கு இருக்கின்றது. ஆனால், மற்றவருக்குத்தான் யாழ்ப்பாணத்தில் செல்வாக்கு இருக்கின்றது என்றுகூட அவர் தெரிவித்திருந்தாராம்.

அதாவது தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் உள்வீட்டுத் தகவல்களைகூட அவர் அறிந்து வைத்திருப்பது இதன்மூலம் தெரிந்தது.

அவ்வாறு சகல விடயங்களையும் நன்கு அறிந்து வைத்திருக்கும் ஜனாதிபதி, தமிழ்க் கட்சிகளுடனான கடந்த புதன்கிழமை நடந்த சந்திப்புக்கு கூட்டமைப்பின் எம். பி. சுமந்திரனை மாத்திரம் அழைத்து கூட்டத்துக்கான அழைப்பை விடுத்ததுடன் மற்றையவர்களையும் கூட்டிக் கொண்டு வாருங்கள் என்று கேட்டிருந்தார் எனவும், அதனால் அவரே மற்றைய கட்சி தலைவர்களுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து கூட்டத்திற்கான அழைப்பை விடுத்தார் என்றும் இப்போது தெரிய வந்திருக்கின்றது. அதனால்தான் அந்தக் கூட்டத்தில் தான் கலந்துகொள்ளவில்லை என்றும் நீதியரசர் விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த பதின்மூன்றாம் திகதி நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கும் ஜனாதிபதி கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் தலைவர்களுக்கு தனியாக அழைப்பு அனுப்பியபோதிலும் தமிழரசுக் கட்சியிலிருந்து இரண்டு பேருக்கு அழைப்பை அனுப்பியிருந்தார். அதனால்தான் சம்பந்தனும் சுமந்திரனும் கலந்துகொண்டனர்.

தமிழரசு சார்பில் யார் கலந்துகொள்ளவேண்டும் என்பதையும் ரணில் விக்கிரமசிங்கவே முடிவுசெய்திருந் தார். சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவர், பாராளுமன்றக் குழுவின் தலைவர் என்பதால் அவர் அழைக்கப்பட்டதில் ஒரு நியாயம் இருந்தது சரி. ஆனால், அடுத்தவர் யார் என்பதை கட்சித் தலைமையிடமே விட்டுவைத்திருக்க வேண்டும். ஆனால், அப்படி நடக்கவில்லை.

இப்போது மீண்டும் சுமந்திரனை பேச்சு மேசையில் முதன்மைப்படுத்த ஜனாதிபதி விரும்புவதில் - அவரின் தரப்பில் நோக்கினால் அதில் தவறிருக்காது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் பணியில் முக்கிய பங்காற்றிய சுமந்திரன், தான் இறுதிசெய்த வரைவில்கூட தமிழ் மக்களின் பல்வேறு அடிப்படைக் கோரிக்கை களையே தவிர்த்துக்கொண்டவர். உதாரணமாக வடக்கு - கிழக்கு இணைப்பு சாத்தியமற்றது என்று வாதாடியவர். அதனால் அதனை தவிர்த்தவர். 'ஏக்க ராஜ்ய' என்பதற்கு புதுவிளக்கம் கொடுத்தவர். தெற்கின் விருப்பதை எப்படி பெறவேண்டும் என்பதை தெரிந்துகொண்ட ஒருவர். அவர் சிங்கள மக்களை எப்படி திருப்திப்படுத்த வேண்டும் என்பதிலேயே - அதாவது தமிழ் மக்களை திருப்திப் படுத்துவதை விட அதிலேயே கவனம் செலுத்துவார் என்பது ரணில் அறியாததல்ல.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை அவருக்கு வேண்டியவர் யார் என்பதும் நாம் புரிந்துகொள் ளக்கூடியதே.

இனி தமிழ் மக்கள் தரப்பில் பேச்சுக்கு யார் தலைமை தாங்கவேண்டும் என்பதை தமிழ் தலைவர்கள் என்போர் தீர்மானிக்க வேண்டும்.

**- ஊர்க்குருவி**

# பொலிஸ் திணைக்களத்துக்கு 125 ஜீப்கள் வழங்கியது இந்தியா!



கொழும்பு, டிசெ. 24

இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு இந்தி யாவால் 125 நவீன ரக பொலிஸ் ஜீப்கள் வழங்கப் பட்டுள்ளன.

இந்தியாவிடமிருந்து படைகளுக்கு தேவை யான 500 வாகனங்களைப் பெற்றுக் கொள்ளும் 100 மில்லியன் டொலர் கடன் திட்டத்தின் கீழ் முதல் தொகுதியாக இவை கையளிக்கப்பட் டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்கிரமரத்ன ஆகியோரிடம் இந்த ஜீப் வாகனங்களை நேற்று முன்தினம் கையளித் தார்.

'அயல்நாட்டுக்கு முதலிடம்' கொள்கைக்கு அமைய இந்திய அரசாங்கம் இலங்கை மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கிவருகிறது.

அதற்கமைய தற்போது வரை புகையிரத திணைக்களம், உட்கட்டமைப்பு, பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, பெற்றோலியம், உரம் வழங்கல் போன்ற பல்வேறு துறைகளில் சுமார் 3.2 பில்லியன் டொலர் பெறுமதியான கடன்கள் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள தாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் சுட்டிக் காட்டியுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக கடந்த மார்ச்சில் உணவு, மருந்துகள், எரிபொருள் போன்ற அத்தி யாவசியப் பொருட்களை வழங்குவதற்காக 100 கோடி டொலர் சலுகைக் கடன் வசதியை நீட்டித் தமை குறிப்பிடத்தக்கது என இந்திய உயர் ஸ்தா னிகராலயம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# தாம்பத்தியத்தை மறுத்த மனைவி; விவாகரத்துக் கோரினார் கணவர்!

## யாழ்ப்பாணத்திலேயே இந்தச் சம்பவம்!

யாழ்ப்பாணம், டிசெ. 24

தாம்பத்திய உறவில் ஈடுபட 26 வருடங்களாக மனைவி அனுமதிக்கவில்லை என்று தெரிவித்து, கணவன் விவாகரத்து வழக்கு தொடர்ந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள நீதிமன்றத் தில் இந்த விவகாரத்து வழக்கு அண்மையில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு இடம்பெற்று வருகிறது.

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியை சேர்ந்த 51 வயதான நபர் ஒருவரே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்தத் தம்பதிக்கு இரண்டு மகன் கள் உள்ளனர். 28, 25 வயதான அவர்கள் தற்போது பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இளைய மகன் பிறந்த பின்னர், மனைவிக்கும் தனக்குமிடையில் தாம்பத்திய உறவு இல்லை என்றும் மனைவி அதற்கு இடமளிக்கவில்லை எனவும் கூறிய கணவர், மகன்கள் வளர்ந்து வேலைக்கு செல்லும் வரை காத்திருந்ததாகவும், தற்போது அந்த சூழல் ஏற்பட்டுள்ளதையடுத்து, விவாகரத்து வழக்கை தாக்கல் செய்துள்ளார் என் றும் தெரிவித்துள்ளார்.

அந்த தம்பதியருக்கு உளநல ஆலோசனை வழங்குமாறு நீதிமன்றம் பரிந்துரை செய்துள் ளது. (ஐ)

# முள்ளியவளையில் வியாபாரி கழுத்து நெரித்துக் கொலை!

முல்லைத்தீவு, டிசெ. 24

முள்ளியவளை நீராவிப் பிட்டி பகுதியில் சிறுவியாபார நிலையத்தை நடத்தி வந்த ஒரு வர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டார் என்று மாவட்ட மருத்துவமனை சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

முள்ளியவளை நீராவிப் பிட்டி பகுதியில் வணிக நிலை யம் நடத்திவந்த வணிகர் ஒரு வர் நேற்றுமுன்தினம் உயிரி ழந்த நிலையில் வணிக நிலை யத்திற்குள் சடலமாக மீட்கப் பட்டார்.

சம்பவத்தில் 68 வயதுடைய அமிர்தலிங்கம் தனபாலசிங்கம் என்பவரே கொலையானார்.

சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டபோதே அவர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட் டார் என்பது தெரிய வந்தது.

சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸார் அழைக்கப்பட்டு விசாரணை கள் தொடர்ந்து வருகின்றன. (ஐ)

# நெல் அறுவடைக்கான எரிபொருள் இலவசம்!

கொழும்பு, டிசெ. 24

இந்த பருவத்தில் நெல் அறுவடைக்கு தேவையான எரிபொருளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அறுவடை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதும் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான தகவல்கள் உரிய திணைக்களங் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவில் இருந்து மானியமாக பெறப்பட்ட இந்த எரிபொருள்கள் விவசாயிகளுக்கு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஒரு ஹெக்ரெயருக்கு 20 லீற்றர் எரிபொருளை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும், நிலத்தை தயார்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எரிபொருள் வழங்கப்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# யாழில் விபத்து முதியவர் பலி!

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் கோப்பாய் கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் 68 வயது முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த தனியார் பஸ், பாதையின் குறுக்கே சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவர் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

பலத்த காயங்களுக்கு உள்ளான அவரை யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச் சைக்காக சேர்த்த போதும் அவர் உயிரிழந் தார். நீர்வேலியை சேர்ந்த முதிய வரை இவ் வாறு உயிரிழந்தார் என்று அறிய வருகிறது.

விபத்துக் குறித்து கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈழநாடு
Eelanadu
24.12.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# சர்வதேச அழுத்தங்கள் பலவீனமடையுமா?

ரணில் விக்கிரமசிங்க சர்வதேச அழுத்தங்களை திசைதிருப்ப முயற்சிக்கின்றார். இதனை இலக்காகக் கொண்டே ரணில் தேசிய பிரச்னையை தீர்க்கப் போகிறார் என்று கூறுகின்றார். கூட்டமைப்பு இதனை விளங்கிக் கொள்ளாமல் செயல்படுகின்றது. சர்வகட்சிக் கூட்டத்தில் கூட்டமைப்பு பங்கு கொண்டதிலிருந்து இவ்வாறான கருத்துகளை அவதானிக்க முடிகின்றது. இது சரியான பார்வைதானா? ரணில் விக்கிரமசிங்க சட்டரீதியில் இலங்கையின் ஜனாதிபதி. அவருக்கு பாராளுமன்றத்தில் செல்வாக்கு இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதற்கு அப்பால் தேசிய இனப்பிரச்னை தொடர்பில் பேசவருமாறு அவர் அழைப்பு விடுக்கும்போது, அதற்கு தமிழர் தரப்பு பதிலளிக்கத்தான் வேண்டும். அரசாங்கத்துடன் பேசுவதால் மனித உரிமைகள் சார்ந்த அழுத்தங்கள் பலவீனமடையுமா?

2009இல் யுத்தம் நிறைவுற்றதைத் தொடர்ந்து ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கத்தை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர், அதே பேரவையில் அரசாங்கத்தின் பொறுப்புக் கூறலை வலியுறுத்தி 2012இல், அமெரிக்க அனுசரணையுடன் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. 2006இல், மனித உரிமைகள் பேரவை உருவாக்கப்பட்ட போது, அப்போதைய ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் பேரவையை நிராகரித்திருந்தது.

மனித உரிமைகளை மீறுவோரும் மனித உரிமைகளை பாதுகாப்பவர்களும் எவ்வாறு ஓரிடத்திலிருக்க முடியுமென்று அமெரிக்கா கேள்வி எழுப்பிருந்தது. 2009இல், ஒபாமா தலைமையிலான ஜனநாயகக் கட்சி அதிகாரத்துக்கு வந்ததைத் தொடர்ந்து ஒபாமா நிர்வாகம் மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து செயல்படும் முடிவை எடுத்தது. அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து செயல்படும் முடிவையெடுத்த பின்புலத்தில்தான் 2012இல், இலங்கையின் பொறுப்புக் கூறலை வலி யுறுத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இன்று நாம் வலியுறுத்தி வரும் சர்வதேச அழுத்தத்துக்கான பிள்ளையார் சுழி இந்த இடத்தில்தான் இடப்பட்டது.

கடந்த பத்து வருடங்களாக இந்த அழுத்தங்கள் தொடர்கின்றன. ஆனால், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எதிர்பார்த்த பெறுபேறுகள் இதுவரையில் கிட்டவில்லை. மனித உரிமைகள் பேரவையின் அழுத்தங்கள் அடிப்படையிலேயே பலவீனமான நிலையில்தான் இருக்கின்றன. இதன் காரணமாகவே, கடந்த பத்து வருட கால அழுத்தங்களால் இலங்கை அரசாங்கத்தை இறங்கிவரச் செய்ய முடியவில்லை. இந்த அழுத்தங்கள் பலவீனமானதாக இருந்தாலும்கூட, அரசாங்கத்தை பொறுத்தவரையில் இலங்கையின் நன்மதிப்பை தொடர்ந்தும் ஏதோவொரு வகையில் மேற்குலகில் பேசுபொருளாக பேணிக்கொள்வதில் இந்த அழுத்தங்கள் ஒரு குறிப்பிட்டளவான பங்களிப்பை வழங்கிவருகின்றது. இதனை இல்லா தொழிக்க வேண்டுமென்னும் நோக்கில் அரசாங்கங்களும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. இனியும் அவ்வாறுதான் செயல்படுவார்கள்.

இதற்கு ரணில் விக்கிரமசிங்க விதிவிலக்கல்ல. ஆனால், அவர்கள் செயல்படுவார்கள் என்பதற்காக அரசாங்கம் பேசுவதற்கு அழைத்தால் அதனை புறக்கணிக்க முடியாது. அவ்வாறு புறக்கணித்தால், அடுத்த கட்டத்தைத் தீர்மானிக்கும் திட்டம் தமிழர்களிடத்தில் இருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவ ரீதியில் பலமாக இருந்தபோதுகூட, பேச்சைப் புறம்தள்ளவில்லை.

மேலும், குறித்த மேற்குலக அழுத்தங்களை ரணில் விக்கிரமசிங்கவால் மடைமாற்றிவிட முடியாது. இந்த அழுத்தங்களை தொடரும் விருப்பம் குறித்த நாடுகளிடம் இருக்கும் வரையில் இதனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஆனால், இவ்வாறான மென்மையான அழுத்தங்களை பிரயோகிக்கும் நாடுகளும் உள்நாட்டுக்குள் பேசிப் பிரச்னைகளை தீர்க்குமாறுதான் அரசாங்கத்தையும் கூட்டமைப்பையும் வலியுறுத்தி வருகின்றன. இந்த யதார்த்தங்களை புரிந்துகொண்டுதான் தமிழர் தரப்புகளும் செயலாற்ற வேண்டும். அரசாங்கம் சூழ்ச்சிகள் புரியும் என்பதால், அதனைக் கண்டு தப்பியோடுவதன் மூலம் அந்த சூழ்ச்சிகளை ஒருபோதுமே எதிர்கொள்ள முடியாது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமுதாய உணவு கூடத்துக்கு வரவேற்பு

*யாழ்ப்பாணம், டிசெ. 24*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்மாதிரியான சமுதாய உணவுக்கூடத் திட்டம் பெரும் வரவேற்பை பெற்று வருகிறது.

நாட்டின் பொருளாதார நிலை மந்தகதியில் காணப்படும் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் உணவைப் பெறுவதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். இதையடுத்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சில விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் ஆரம்பித்த இந்தத் திட்டம், மாணவர்களின் ஒத்துழைப்புடன் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் வாரந்தோறும் திங்கள் முதல் வெள்ளி வரையான நாட்களில் ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் பசியாறி வருகின்றனர்.

பல்கலைக்கழகத்தின் சமையலறையில் மரக்கறி வெட்டுவதில் இருந்து மாணவர்களுக்கு உணவு பரிமாறுவது, பாத்திரம் கழுவுவது என அனைத்து செயல்பாடுகளிலும் மாணவர்களுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் முழு மனதோடு ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், மாணவர்களும் விரிவுரை தவிர்ந்த மற்ற நேரங்களில் தங்களாலான உதவிகளை செய்து வருகின்றனர்.

விரிவுரையாளர்கள் சிலரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த சமூக சமையலறை உணவுத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் மேலும் பல விரிவுரையாளர்கள் இணைந்து செயல்படுகின்றனர். இந்த சமூக சமையலறை திட்டப் பணிகள் ஏறத்தாழ 4 மாதங்களாக மாணவர்களின் பசியை ஆற்றும் நோக்கோடு இயங்கி வருகிறது.

நாட்டின் பொருளாதார நிலை சுமுகமாகும் வரை தொடர்ந்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளின் உதவியுடனேயே இந்த சமுதாய உணவுக்கூடம் செயல்படுகிறது.

நாட்டின் எந்தவொரு பல்கலைக்கழகமும் எடுத்திராத மாணவர் நலன்சார் செயல்பாட்டை யாழ். பல்கலைக்கழகம் தொடர்ந்து மேற்கொண்டு வருவதை இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க கண்டு பாராட்டியுள்ளார்.



இது தொடர்பில் அவர் கூறுகையில்,

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் எந்தவொரு மாணவரும் மதிய வேளையில் பசியுடன் கல்வி கற்காமல், இலவசமாக உணவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் இந்த சமுதாய சமையலறை செயற்படுகிறது.

இதில் மாணவர்களின் உணவுக்கான செலவு நாளொன்றில் 50 ஆயிரம் ரூபாயைக் கடந்துள்ள போதும், இந்த செயல்பாடு இன்று வரை தொடர்கிறது. இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்த விரிவுரையாளர்கள், சமுதாய சமையலறை திட்டத்துக்கென கூட்டங்களை ஒருங்கமைத்து முடிவுகளை எடுக்கும் வகையில் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் இணைந்த குழுவொன்றை அமைத்து, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா செயல்பட்டு வரும் விதம் பாராட்டுக்குரியது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் மற்றும் கலைப்பீட மாணவர்கள், இந்த செயற்பாட்டுக்காக துணை நிற்கும் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் இதற்காக காலை முதல் மதியம் வரை உழைத்து வரும் மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் போன்றோரும் பாராட்டப்பட வேண்டியவர்களே - என்றார்.

# தபால் மூலம் அனுப்பப்பட்ட போதைப் பொருட்கள் மீட்பு

*கொழும்பு, டிசெ. 24*

பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து தபால் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட சந்தேகத்துக்கிடமான பொம்மைகள் கொண்ட பொதிகள் மற்றும் உணவுகள் அடங்கிய ரின்களில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 16 கோடி ரூபாய்க்கும் அதிகம் பெறுமதியான போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.


இவ்வாறு 7 பொதிகளை சோதனையிட்ட போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த போதைப்பொருட்களில் 4,673 கிராம் குஷ் மற்றும் 9,586 போதை மாத்திரைகளும் அடங்குகின்றன என்று சுங்கத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.



மேலதிக விசாரணைகளுக்காக போதைப் பொருள் பொதிகள் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக சுங்கப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 24 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 09
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பிரதமை




**மேடம்**
உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். நேற்றுவரை இருந்த சங்கடங்கள் விலகும். சூழ்நிலைகளை புரிந்து கொண்டு சிந்தித்து செயல்படுவீர்கள் உங்கள் முயற்சி ஒன்று வெற்றியாகும்.

**இடபம்**
இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் உங்கள் மன நிலையில் பதட்டம் ஏற்படும். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். எதிர்பார்ப்புகள் தள்ளிப் போகும்.

**மிதுனம்**
நண்பர்கள் உதவியுடன் நீங்கள் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட சல சலப்புகள் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கடகம்**
முயற்சி ஒன்றில் போராடி வெற்றி பெறுவீர்கள். உங்கள் திறமை வெளிப்படும் நாள். பழைய பிரசசினை ஒன்றில் முடிவு காண்பீர்கள். மறைமுக எதிரிகள் விலகிச்செல்வார்கள்.

**சிம்மம்**
குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உங்கள் நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் நல்லவர் யார் பகைவர் யார் என்பதைப் புரிந்து கொண்டு செயல்படுவீர்கள்.

**கன்னி**
தடைகளைத் தாண்டி உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். குடும்பத்துடன் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். ஆலய தரிசனம் மேற்கொள்வீர்கள். நீங்கள் எதிர்பார்த்த பணம் வந்து சேரும்

**துலாம்**
உங்கள் முயற்சியில் இருந்த தடைகள் விலகும். துணிச்சலுடன் செயல்பட்டு லாபமடைவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளை குடும்பத்தினர் ஆதரவுடன் சரி செய்வீர்கள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி வந்து சேரும். நண்பர்களால் ஒரு முயற்சி நிறைவேறும். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்சினைகள் விலகும். புதிய முயற்சி ஒன்று நிறைவேறும்.

**தனுசு**
மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். முயற்சியில் தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகளை சமாளித்து உங்கள் முயற்சியில் வெற்றி அடைவீர்கள். செயல்களில் கவனம் தேவை.

**மகரம்**
மறைமுக எதிர்ப்புகள் தோன்றினாலும் அவற்றை சமாளித்து நினைத்ததை சாதிப்பீர்கள். தம்பதிகள் ஒருவருக்கு ஒருவர் அனுசரித்து செல்வதால் குடும்பத்தில் நன்மை அதிகரிக்கும்.

**கும்பம்**
திட்டமிட்ட வேலைகளை திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். எதிர்பாராத வரவு வந்து சேரும். வியாபாரத்தில் உங்கள் முயற்சி வெற்றியாகும். பழைய கடன்களை அடைப்பீர்கள்.

**மீனம்**
சுறு சுறுப்பாக செயல்பட்டு கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். காணாமல் போன ஒரு பொருள் இன்று கிடைக்கும். புதிய நம்பிக்கை உண்டாகும். உங்கள் முயற்சிகள் வெற்றியாகும்.

# யாழ்.-காரைக்கால் கப்பல் சேவை இரண்டு மாதங்கள் தாமதமாகும்!

புதுச்சேரி, டிசெ. 24

புதுச்சேரி பிராந்தியமான காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கப்பல் சேவை அடுத்தமாதம் தொடங்காது. சோதனை நிலையப் பணிகள் நடப்பதால் இரு மாதங்களாகும்.

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் இந்தியர்கள் அதிகளவில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் வசதிக்காக இந்தியாவின் யூனியன் பிரதேசமான புதுச்சேரி பிராந்தியமான காரைக்கால் - யாழ்ப்பாணம் பயணியர் கப்பல் சேவை அடுத்தமாதம் தொடங்கப்பட உள்ளதாக இலங்கை அரசு அறிவித்திருந்தது. இதற்கு இந்திய அரசாங்கமும் ஒப்புதல் அளித்துள்ளது.

வரும் ஜனவரியில் கப்பல் போக்குவரத்து தொடங்க வாய்ப்புள்ளதா என்று துறைமுகத் துறை செயலர் ஜவகரிடம் கேட்டதற்கு, "கப்பல் போக்குவரத்துக்கு மத்திய அரசிடம் ஒப்புதல் அளித்துள்ளது. காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஐந்து நிறுவனங்கள் கப்பல் போக்குவரத்தை நடத்த விண்ணப்பித்தனர். அவர்களின் பின்புலத்தை ஆராய்ந்து ஒப்புதலை மத்திய அரசு அளிக்கும். கப்பல் சேவைக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பயணிகள் சோதனை நிலையம் உள்ளிட்ட அனைத்து பணிகளும் நடந்து வருகிறது.

கப்பல் சேவையை ஜனவரியில் தொடங்குவது கடினம். தற்போதைய பணிகள் நிறைவடைய இரு மாதங்களாகும். அதன்பிறகு கப்பல் போக்குவரத்து திகதி இறுதி செய்யப்படும். வர்த்தகம் மட்டுமில்லாமல் சுற்றுலாவுக்கும் உகந்ததாக இந்த சேவை இருக்கும். குறிப்பாக காரைக்கால் திருநள்ளாறு கோயில் உள்ளிட்ட ஆன்மீக சுற்றுலாவும் நன்கு வளர்ச்சி அடையும்" என்று குறிப்பிட்டார்.

கப்பல் போக்குவரத்து தொடர்பாக அரசு வட்டாரங்களில் விசாரித்தபோது," காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணத்தை மூன்றரை மணி நேரம் முதல் நான்கு மணி நேரத்துக்குள் சென்றடையலாம். பயணக்கட்டணம் 5 ஆயிரம் ரூபாயாக நிர்ணயிக்க திட்டமிட்டுள்ளனர். படகு சேவையில் 300 முதல் 400 பயணிகள் பயணிக்கலாம். அத்துடன் ஒரு பயணி 100 கிலோ வரை உடமைகளை எடுத்து செல்லலாம்" என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல ஜெயலலிதாவேதான் மறுத்தார்!

## சசிகலா தெரிவிப்பு



சென்னை, டிசெ. 24

சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல விருப்பமில்லை என மருத்துவர்களிடம் கூறியதே ஜெயலலிதாதான் என்று சசிகலா தெரிவித்தார்.

சென்னையில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர் செய்தியாளர், "அ. தி. மு. கவை யாராலும் அசைக்க முடியாது. ஆறுமுகசாமி ஆணையத்திடம் இருந்து சிறைக்கு வந்த கடிதத்தில், நேரில் வந்து பதில் அளிக்கலாம் - வழக்கறிஞர் மூலம் பதில் அளிக்கலாம் - எழுத்து மூலம் பதில் அளிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. நான் எழுத்து மூலம் பதில் அளிக்க முடிவு செய்து, ஆணையம் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளித்தேன்.

நாங்கள் ஜெயலலிதாவை வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டோம். ஆனால், ஜெயலலிதாதான் இங்கு சிகிச்சை நன்றாக உள்ளது. வெளிநாடு வேண்டாம் என்று தெரிவித்தார். சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல விருப்பமில்லை என மருத்துவர்களிடம் கூறியதே ஜெய லலிதாதான்.

ஒருவரை எதிர்க்க வேண்டும் என்றால் நேருக்கு நேர் நின்று எதிர்க்க வேண்டும். முதுகுக்கு பின்னாடி பேசுபவர்கள் நாங்கள் கிடையாது. தி. மு. க. கொடுத்த வாக்குறுதிகளை செய்ய வேண்டும். விளம்பரம் செய்வது மட்டுமே ஆட்சி இல்லை. மக்களுக்கு செய்ய வேண்டியதை செய்ய வேண்டும். இல்லை என்றால் மக்கள் முடிவு செய்வார்கள். அதிமுகவில் அனைவரையும் ஒன்றிணைக்கும் பணியை தொடங்கி விட்டேன்.", என்றார். (ஐ)

# மீனவர் பிரச்னைக்கு தீர்வுகாண அரசாங்கங்கள் பேச வேண்டும்!

சென்னை, டிசெ. 24

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் பிரச்னைக்கு தீர்வுகாணும் வகையில் இரு தரப்பு மீனவர்களிடையே பேச்சு நடத்த மத்திய, மாநில அரசுகள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்றுதனது ருவிற்றர் பதிவில்



கூறியிருப்பதாவது:

வங்கக் கடலில் கோடிய கரை அருகில் மீன் பிடித்த 12 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. அவர்களின் படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைதான 12மீனவர்களையும் ஏற்கெனவே, பறிமுதல் செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளையும் மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்கள் பிரச்னைக்கு தீர்வுகாண, இரு தரப்பு மீனவர்களின் பேச்சுக்கு மத்திய, மாநில அரசுகள் ஏற்பாடு செய்ய வேண்டும் - என்றார்.

# தி. மு. கவின் எம். பி. ராசாவின் ரூ. 55 கோடி சொத்து முடக்கம்!

சென்னை, டிசெ. 24

தி. மு. க. எம். பி. ஆ. ராசாவின் 55 கோடி இந்திய ரூபாய் மதிப்பிலான கோவையில் உள்ள 45 ஏக்கர் நிலத்தை சட்ட அமுலாக்கத்துறை முடக்கியுள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சரும், நீலகிரி தொகுதி எம்.பி.யுமான ராசா, கடந்த 1999 முதல் 2010ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் வருமானத்துக்கு அதிகமாக 27 கோடியே 92 இலட்சம் ரூபாய் அளவுக்கு சொத்து சேர்த்தார் என்று சி. பி. ஐ. வழக்குப்பதிவு செய்தது. அதாவது வருமானத்துக்கு அதிகமாக 575 சதவீதம் சொத்து சேர்க்கப்பட்டதாக இந்த புகாரில் கூறப்பட்டது.

கடந்த 2015ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இந்த வழக்கில் ராசா மற்றும் அவரது குடும்பத்தினர் உள்பட 16 பேருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டது.

இதையடுத்து, தற்போது ஆ.ராசாவின் 55 கோடி ரூபாய் மதிப்பிலான பினாமி சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியது. (ஐ)

# தேர்தலை பிற்போட சூழ்ச்சிகளில் அரசு

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

**கொழும்பு, டிசெ. 24**

**உள்ளூராட்சி தேர்தலை பிற்போட அரசாங்கம் பல சூழ்ச்சிகளை மேற்கொண்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றம் சுமத்தியுள்ளார்.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படவேண்டும்.

தேர்தலை உரிய காலத்தில் நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளது. இந்தநிலையில் எதிர்வரும் மாதம் முதல் வாரத்தில் வேட்பு மனுத்தாக்கல் தொடர்பான அறிவிப்பை ஆணைக்குழு வெளியிடும் என எதிர்பார்த்துள்ளோம்.

தேர்தலை உரிய காலத்தில் நடத்த ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ள நிலையில் தேர்தலை ஏதாவதொரு வழிமுறையில் பிற்போடுவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

உள்ளூராட்சி தேர்தல் விவகாரத்தில் அரசாங்கத்துக்கும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இருமுனை போட்டி நிலவுகிறது.

மூன்று பிரதான காரணிகளை அடிப்படையாக கொண்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் தேர்தலை நடத்துவதை பிற்போட அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது - என்றார். (அ)

# வங்காள விரிகுடா கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை!

கொழும்பு, டிசெ. 24

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக நிலைகொண்டிருந்த குறைந்த அழுத்தப் பிரதேசம் ஒரு தாழமுக்கமாக வலுவடைந்து திருகோணமலைக்கு வடகிழக்காக 420 கிலோ மீற்றர் தூரத்தில் மையம் கொண்டுள்ளது.

அது இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை இலங்கையைக் கடக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

எனவே, கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளிலும் தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் மறு அறிவித்தல் வரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால ஆலோசனைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறீர்கள்.

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு அல்லது வடக்குதிசையில் இருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மன்னாரில் இருந்து காங்கேசன்துறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 55-65 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (அ)

# வருட இறுதி நிகழ்வுகள் குறித்து பொலிஸார் விசேட அவதானம்

கொழும்பு, டிசெ. 24

வருட இறுதி நிகழ்வுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

தற்போது நாடளாவிய ரீதியில் வேகமாக பரவி வரும் ஐஸ் போதைப்பொருள் பாவனையை குறைக்கும் வகையில் இந்த தரப்பினர் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனையாளர்கள் மற்றும் வருடாந்த இறுதி விருந்துகளை நடத்துபவர்கள் குறித்த புலனாய்வுத் தகவல்களை பொலிஸார் ஏற்கனவே சேகரித்து வருகின்றனர்.

அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ கூறினார். (அ)

# சீதுவை பகுதியில் சூட்டில் ஒருவர் பலி

கொழும்பு, டிசெ. 24

சீதுவையில் நேற்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த நபர் ராகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொட்டுகொட - சீதுவ வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்த நபர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிதாரிகள் கைத்துப்பாக்கியை பயன்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரத்தொலுவ பிரதேசத்தில் வசிக்கும் 39 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

சீதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஆஷூ மாரசிங்க இராஜினாமா

கொழும்பு, டிசெ. 24

பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் பேராசிரியர் ஆஷூ மாரசிங்க உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இதேவேளை, தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# பூநகரி வேரவில் பகுதியில் பொறியில் சிக்கிய சிறுத்தை

கிளிநொச்சி, டிசெ. 24

கிளிநொச்சி பூநகரி வேரவில் பகுதியில் தனியார் ஒருவரின் தோட்டத்தில் வைக்கப்பட்ட பொறியில் சிக்கிய பெண் சிறுத்தையை வனவளத் திணைக்களத்தினர் மீட்டுள்ளனர்.

தோட்டத்துக்கு வரும் பன்றி,முயல் உள்ளிட்ட விலங்குகளுக்காக வைக்கப்பட்ட பொறியில் சிக்கிய நிலையில் சிறுத்தை காணப்பட்டதை அவதானித்த காணி உரிமையாளர் கிராம சேவையாளர் மூலம் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, வனஜீவராசிகள் திணைக்கள வைத்தியர் குழு குறித்த சிறுத்தையை மீட்டு சிகிச்சைக்காக வனஜீவராசிகள் திணைக்களத்தின் வடமாகாண மருத்துவ சிகிச்சை நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளது. (அ)

# முல்லைத்தீவு வலய ஆசிரியரின் சம்பள வரி அறவிட்ட முறை தவறு

## வடமாகாண கல்வி அமைச்சுக்கு இறைவரித் திணைக்களம் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 24

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவருக்கு அவர் பெறும் சம்பளத்திற்கான உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிட்டமை தவறு என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆசிரியர் ஒருவருக்கு ஜூன் மாதச் சம்பளத்தில் உழைக்கும்போது வரி அறவீட்டு முறையின் கீழ் 18,401 ரூபா கழிக்கப்பட்டது.

2018, 2019 வரி மதிப்பீட்டுக்கான உள்நாட்டு வருமானவரிச் சட்ட ஏற்பாடுகளின் படி உழைக்கும்போது செலுத்த வேண்டிய வரி அளவீட்டு முறைக்கு மாறாக வரி அளவிடப்பட்டமை தொடர்பில் ஆசிரியரால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏற்பாடுகளின் படி உழைக்கும் போது செலுத்தவேண்டிய வரி அறவீட்டு சுற்றறிக்கைகளை முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகம் உரிய முறையில் பின்பற்றவில்லை என தெரிவித்து குறித்த ஆசிரியரால் இறைவரித் திணைக்களத்துக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பப்பட்டது.

குறித்த கடிதத்தில் குறித்த முறைப்பாட்டாளரான ஆசிரியரின் சம்பள வரியை அறவிட்ட முறை தவறு என சுட்டிக்காட்டியதுடன் கழிக்கப்பட்ட சம்பள வரியை மீள வழங்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேர்தலைப் பிற்போடுமாறு அரசு ஆணைக்குழுவுக்கு கடும் அழுத்தம்



கொழும்பு, டிசெ. 24

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுமாறு அரசாங்கம், தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடும் அழுத்தம் பிரயோகித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய நிலைமைக்கு அமைய தேர்தலை பிற்போட முடியாது.

நடைமுறை சட்டத்திற்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும்.

தேர்தலை பிற்போட வேண்டுமாயின் பாராளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் தேர்தலை பிற்போட அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை உள்ளது.

ஏனெனில் இரு தரப்பினரும் மக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

தேர்தல் விடயத்தில் நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து செயல்படவேண்டும் - என்றார். (அ)

# தேர்தலை நடத்துவதால் நெருக்கடி தீவிரமாகும்!

## எச்சரிக்கிறார் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, டிசெ. 24

**தேர்தலை நடத்தினால் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்கு தயாராக உள்ளோம்.

எனினும், நாடு என்ற ரீதியில் தேர்தலுக்கு தயாராக இருக்கிறோமா என்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு செயற்படும் நிலை தற்போது கிடையாது.

தற்போதை வாழ்க்கை செலவுக்கு அமைய தேர்தல் ஒன்றை நடத்த குறைந்தது 20 பில்லியன் ரூபாவுக்கும் அதிக நிதி செலவாகும் என்பதை எதிர்க்கட்சியினர் நன்கு அறிவார்கள்.

அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல, இருப்பினும் தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்திற்காக தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகிறார்கள்.

தேர்தலை நடத்துவதால் ஒன்றும் மாற்றமடைய போவதில்லை - என்றார். (அ)

# சிறுமிக்கு மதுபானம் கொடுத்து துஷ்பிரயோகம் செய்தவர் கைது!

கொழும்பு, டிசெ. 24

இறக்குவானையில் இருந்து 15 வயதுடைய சிறுமியை ஓட்டோவில் கடத்தி பாழடைந்த வீட்டுக்கு அழைத்துச் சென்று, பலவந்தமான முறையில் மது அருந்த வைத்துவிட்டு பாலியல் பலாத்காரம் செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இறக்குவானை பொலிஸ் பிரிவில் வசிக்கும் 24 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஆவார்.

சந்தேக நபர் சிறுமியை பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்திய பின்னர், அவரது இரண்டு நண்பர்களும் குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாக அப்பகுதியின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறுவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக கூறப்படும் ஏனைய இருவரை கைது செய்ய இறக்குவானை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

முதலில் கைது செய்யப்பட்ட 24 வயதுடைய சந்தேக நபருடன் குறித்த சிறுமி காதல் உறவில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவளது காதலன் என்று கூறிக்கொண்ட 24 வயது இளைஞன், முதலில் சிறுமிக்கு பலவந்தமாக மது வழங்கிவிட்டு, பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், பின்னர் அவரது இரண்டு நண்பர்களும் அவளை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாகவும் பொலிஸார் கூறினர். (அ)

## புதிய ஒமிக்ரோன் மாறுபாடு:


# சுற்றுலாப் பயணிகள் குறித்து மிக அவதானம் அவசியமானது

கொழும்பு, டிசெ. 24

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என சுகாதார தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சீனாவில் பரவி வரும் புதிய ஒமிக்ரோன் மாறுபாடுகளினால் பாதிக்கப்பட்ட நான்கு நோயாளிகள் இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதன்காரணமாக எதிர்காலத்தில் மீண்டும் முகக்கவச பாவனையை கட்டாயமாக்கும் யோசனை ஒன்றும் கொண்டு



வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், நாட்டிற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் மீண்டும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# பம்பலப்பிட்டி வர்த்தகரின் வீட்டில் கைவரிசை காட்டிய இருவர் கைது

கொழும்பு, டிசெ. 24

பம்பலப்பிட்டி - ஸ்கெல்டன் வீதியிலுள்ள கோடீஸ்வர வர்த்தகரின் வீட்டில் சுமார் 25 கோடி ரூபா, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்கள், தங்கம், வெள்ளி, முத்துக்கள் மற்றும் கைத்துப்பாக்கி என்பவற்றை திருடிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொரளை மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸார் இணைந்து சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரிடமும் 380 கிராம் தங்க நகைகள், 10,000 அமெரிக்க டொலர்கள், 950,000 ஜப்பானிய யென், ரொலக்ஸ் கைக்கடிகாரங்கள் மற்றும் 174 இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கற்கள், கைத்துப்பாக்கி மற்றும் பத்து கிராமுக்கு அதிகமான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கோடீஸ்வர வர்த்தகரின் மூன்று மாடி வீட்டின் இரண்டாவது மாடியில் உள்ள குளியலறையின் ஜன்னல் வழியாக வீட்டுக்குள் நுழைந்த சந்தேக நபர்கள் அங்கிருந்த சொத்துக்களை திருடி தப்பிச்சென்றுள்ளார்.

கோடீஸ்வர தொழிலதிபர் திருடியபோது அவரது மனைவி மற்றும் இரண்டு பணிப்பெண்கள் கீழ்த்தளத்தில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட சொத்துகள் தொழிலதிபர், அவரது மனைவி மற்றும் அவரது மருமகளுக்குச் சொந்தமானது என்று விசாரணை செய்துவரும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# தமிழகத்தில் கைதான 9 பேரையும் இலங்கைக்கு அழைத்துவர ஏற்பாடு

கொழும்பு, டிசெ. 24

இலங்கை மற்றும் இந்தியாவில் சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுத வர்த்தகம் தொடர்பில், தமிழகம், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் கைது செய்யப்பட்ட 9 இலங்கையர்களையும் நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதன்படி, தமிழ்நாட்டுக்கு சென்று அவர்கள் குறித்த எதிர்கால சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு விசேட குழுவொன்றை பெயரிடவுள்ளதாகவும் அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

விரைவில் குறித்த குழுவை இந்தியாவுக்கு அனுப்பி அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மற்றும் இந்தியாவில் சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுத வர்த்தகம் தொடர்பில், தமிழகம், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் இருந்து ஒன்பது இலங்கையர்களை இந்தியாவின் தேசிய புலனாய்வு அமைப்பு, கடந்த திங்கட்கிழமை மீண்டும் கைது செய்தது. பிரேம் குமார் எனப்படும் குணா என்ற சி.குணசேகரன், பூக்குட்டி கண்ணா என்ற புஷ்பராஜா, மொஹமட் அஸ்மின், அழகப்பெரும சுனில் காமினி பொன்சேகா, ஸ்டான்லி கெனடி பெர் னாண்டோ, லடியா, தனுக்க ரொஷான், வெல்ல சுரங்க என்ற கமகே சுரங்க பிரதீப், திலீபன் ஆகியோரே கைது செய்யப்பட்டனர். (அ)

# ஆடு மேய்ப்பதற்கு சென்ற இளைஞன் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர் - வாதரவத்தைப் பகுதியில் ஆடு மேய்க்க சென்றிருந்த இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் மாலை ஆடு மேய்ப்பதற்காக சென்றிருந்த வாதரவத்தை - பெரிய பொக்கணை பகுதியை சேர்ந்த செ.ராகுலன் (வயது-25) என்ற இளைஞன் நேற்றுக் காலை ஆகியும் வீடு திரும்பவில்லை.

இந்நிலையில் இளைஞனின் தந்தை இளைஞனை தேடிச் சென்றிருந்தபோது நீரில் மூழ்கி அவர் உயிரிழந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

வலிப்பு காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சீஷெல்ஸ் - ஓமான் வேலைவாய்ப்பு மோசடி; முகவர் நிலைய அனுமதிப்பத்திரம் இரத்து

கொழும்பு, டிசெ. 24

சீஷெல்ஸில் பணிக்கு செல்வதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து, பெண் ஒருவரை சுற்றுலா விசாவில் ஓமானுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்ல முயன்ற முகவர் நிறுவனத்தின் உரிமையாளரை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கவனம் செலுத்திய தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, சம்பந்தப்பட்ட முகவர் நிலையத்தின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யுமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் மகேந்திர குமாரசிங்கவிடம் அறிவித்துள்ளதாகவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

பெண் ஒருவர் வெளிநாடு செல்வதற்காக விமான நிலையத்துக்குச் சென்றபோது, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகள் அவரது பதிவைச் சரிபார்த்தபோது, சீஷெல்ஸுக்கு வழங்கப்பட்ட வேலை விசாவும், ஓமானுக்கு வழங்கப்பட்ட சுற்றுலா விசாவும் கண்டுபிடிக்கப்பட்டன. தனிப்பட்ட முறையில் இறக்குமதி செய்யப்பட்ட விசாவில் பதிவு செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பெண் சுற்றுலா விசாவில் ஓமானுக்கு செல்ல திட்டமிட்டிருந்தமை தெரியவந்ததையடுத்து, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசாரணை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், முகவர் நிறுவன உரிமையாளர் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (அ)

# இந்த அரசு இருக்கும் வரை நாட்டுக்கு மீட்சி கிடையாது!

## கூறுகிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, டிசெ. 24

வங்குரோத்து அடைந்துள்ள எமது நாட்டை இந்த அரசாங்கத்தால் மீட்டெடுக்க முடியாது, இந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் வரைக்கும் நாட்டுக்கு மீட்சி இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

எமது நாடு வங்குரோத்து அடைந்த நாடு என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளிடம் எமது நாடு கடன் பெற்றுள்ளது. அந்த கடனை மீளச் செலுத்திக் கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலைமை தற்போது உருவாகியுள்ளது. இதனால் நாட்டு மக்களால் வாழ முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

வாழ்வாதார செலவீனம் அதிகரித்து மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்கு உள்ளாகியுள்ளது.

தொழில்வாய்ப்பற்ற நிலைமைகள் உருவாகியுள்ளன. தொழிற்றுறைகள் செயலிழந்துள்ளன.

நாட்டில் மந்தபோசனை பிரச்னை என்பது தீவிர நிலைமையை அடைந்துள்ளது.

மந்த போசனையால் ஒரு இலட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நூற்றுக்கு 50 வீதமானோர் மூன்று வேளைகளும் உணவு உட்கொள்ள முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டில் வறுமை நிலைமை அதிகரித்துள்ளது. பெற்றோர் தங்களது பிள்ளைகளுக்குத் தேவையான கொப்பிகள், புத்தகங்களை வாங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு மக்களிடம் போதிய பணம் இல்லை. நாட்டில் சகல துறைகளும் செயலிழந்து காணப்படுகின்றது.

நாடு இன்று வங்குரோத்து அடைந்தமைக்கு அரசியல்வாதிகளே பொறுப்புக் கூறவேண்டும் - என்றார். (அ)

# இலங்கை பெண்ணொருவர் ஓமானில் துஷ்பிரயோகம்!

## இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் தொடர்பு

கொழும்பு, டிசெ. 24

ஓமானில் வீட்டு வேலைக்காக நாட்டை விட்டு வெளியேறிய பெண்களுக்கு எதிரான பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

ஓமானுக்கு சென்ற குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின்போதே இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

மனித கடத்தல் தொடர்பான 15 சம்பவங்கள் தொடர்பில் தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமான் பிரஜை ஒருவரால் வீட்டுப் பணிப்பெண் ஒருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

துஷ்பிரயோகம் செய்யப்பட்ட குறித்த பெண் இலங்கைப் பிரதிநிதிகளால் சம்பந்தப்பட்ட நபருக்கு அறிமுகப் படுத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இரு வீட்டுப் பணியாளர்களை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தமையுடன் இலங்கை துணை முகவர்கள் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

அத்துடன், வீட்டு வேலைக்கு அனுப்புவதாக கூறி பெண் ஒருவரை மாடு, ஆடுகளை பராமரிக்க அனுப்பியமை தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், சித்திரவதைக்கு உள்ளான வீட்டுப் பணியாளர்கள் குழு இன்னும் ஓமான் பாதுகாப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# காரைநகர் ஈழத்து சிதம்பரத்தின் திருவெம்பாவை ஏற்பாடு பூர்த்தி

யாழ்ப்பாணம், டிசெ. 24

காரைநகர் ஈழத்து சிதம்பர வருடாந்த திருவெம்பாவை உற்சவத்துக்குரிய சகல ஆயத்தப் பணிகளும் பூர்த்தியடைந்துள்ளதாக காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் க.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இவ்வருட திருவெம்பாவை உற்சவத்தை சிறப்பாக முன்னெடுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் காரைநகர் பிரதேச செயலர் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் இவ்வருட திருவெம்பாவை உற்சவத்தை சிறப்பாக முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளோடு கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து விடயம் தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினருடன் கலந்துரையாடப்பட்டது. நீர் மற்றும் திண்மக்கழிவகற்றல் விடயங்களை பிரதேச சபை பொறுப்பேற்பதாகவும் பாதுகாப்பு மற்றும் வீதி ஒழுங்குபடுத்தலைப் பொலிஸார் மேற்கொள்வது எனவும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# கேக்கின் விலை உயர்வு

கொழும்பு, டிசெ. 24

சந்தையில் ஏற்பட்டுள்ள கடுமையான முட்டை தட்டுப்பாடு மற்றும் முட்டையின் விலை அதிகரிப்பு காரணமாக இந்த பண்டிகைக் காலத்தில் ஒரு கிலோ கேக்கின் விலை 1500 ரூபாவாக அதிகரித்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன கூறினார்.

ஒரு மாதத்துக்கு முன்னர் 1100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கேக்கின் விலை 1500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், பண்டிகைக் காலங்களில் கேக்குக்கான கேள்வி 25 வீதத்தால் குறைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

முட்டைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதால் பண்டிகைக் காலங்களில் கேக் தேவையைப் பூர்த்தி செய்ய முடி யாது என்று கூறிய அவர், ஒரு சில பாரியளவான பேக்கரிகளைத் தவிர, சிறிய அளவிலான பேக்கரிகள், கேக் உற்பத்தியை கைவிட்டுள்ளதாக தெரிவித்தார்.

## தினேஷ் ஷாப்டரின் கொலை:

# சகோதரர்கள் இருவரிடமும் சி.ஐ.டியினர் தீவிர விசாரணை

கொழும்பு, டிசெ. 24

ஜனசக்தி குழுமத்தின் பணிப்பாளரும் பிரபல வர்த்தகருமான மறைந்த தினேஸ் ஷாப்டரின் சகோதரர்கள் இருவரிடம் நேற்று முன்தினம் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளனர்.

அதன்படி, பொல்ஹேன் கொட, கிருலப்பனையில் உள்ள அலுவலகத்துக்கு அவரது சகோதரர்கள் இருவரையும் அழைத்த விசாரணை அதிகாரிகள், விசாரணை தொடர்பான தகவல்களைப் பெற்றுள்ளனர்.

விசாரணைக்கு தேவையெனில் குறித்த இருவரையும் மீண்டும் அழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என விசாரணைப் பிரிவினர் தெரிவித்தனர்.

ஷாப்டரின் கொலைச் சம்பவம் தொடர்பாக அவரது மனைவியிடமும் விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டதாகவும், அவரது மனைவியின் வாக்குமூலங்கள், ஷாப்டரின் சகோதரர்கள் வழங்கிய வாக்குமூலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும் எனவும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதன்படி, இந்த கொலை தொடர்பாக இதுவரை சுமார் 60 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், விசாரணை மற்றும் தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கைகளை கண்காணித்ததன் மூலம் ஷாப்டரின் கொலை தொடர்பான பல முக்கிய தகவல்கள் வெளிவந்துள்ளன, ஆனால் அவை விசாரணைகளுக்கு இடையூறாக இருக்கும் என்பதால் அவற்றை ஊடகங்களுக்கு வெளியிட முடியாது என்று உயர் அதிகாரி கூறினார். (அ)

# அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் அரசுக்கு சிக்கல்

கொழும்பு, டிசெ. 24

அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் மற்றும் சமூக நல கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரசாங்கத்துக்கு கிடைக்கும் வருமானம் போதுமானதாக இல்லை என நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய வரிக் கொள்கைகள் தொடர்பில் நிதியமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வருமான வரியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

சகல சீர்திருத்தங்களையும் முன்னெடுப்பதற்கு இதுவே சிறந்த சந்தர்ப்பம் என நாணய, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் நிதிக் கொள்கைப் பணிப்பாளர் நாயகம் கபில சேனாநாயக்க குறிப்பிட்டார்.

சம்பள வகைகளுக்கு ஏற்ப தனிநபர் வருமான வரியில் மாற்றம் செய்யப்படும். இதன்படி,150,000 ரூபாய் சம்பளத்திற்கு 3500 ரூபாய் வரி அறவி டப்படும். 200,000 ரூபாய் சம்பளத்திற்கு 10,500 ரூபாய் வரி அறவிடப்படும். 250,000 ரூபாய் சம்பளத்திற்கு 21,000 ரூபாய் வரி அறவிடப்படும்.

300,000 ரூபாய் சம்பளத்திற்கு 35,000 ரூபாய் வரி அறவிடப்படும். 350,000 ரூபாய் சம்பளத்திற்கு 52,500 ரூபாய் வரி அறவிடப்படும்.

400,000 ரூபாய் சம்பளத்திற்கு 70,500 ரூபாய் வரி அறவிடப் படும்.10 லட்சம் ரூபாய் சம்பளத்திற்கு 286,500 ரூபாய் வரி அறவிடப்படும்.

இதேவேளை நிறுத்தி வைக்கும் வரியும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இலாபம் பெறும் அதாவது வட்டிக்கு பணம் வழங்கும் துறைகளுக்கு 15 சதவீத வருமானத்திற்கு 5 சதவீத வரி மற்றும் இலட்சத்திற்கு மேல் வாடகை செலுத்தினால் 10 சதவீத வரி அறவிடப்படும். (அ)

# போலிக் காணி உறுதியை தயாரித்து 15 ஏக்கரை அரசியல்வாதிக்கு விற்ற முன்னாள் அரச அதிகாரி

கொழும்பு, டிசெ. 24

புத்தளம் மதுங்குளி பிரதேசத்தில் அமைந்துள்ள உணவிலி தோட்டத்தில் 15 ஏக்கர் நிலத்தை போலி காணி உறுதியை தயாரித்து,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான பாலித ரங்கே பண்டாரவுக்கு 2 கோடியே 33 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்து மோசடி செய்த சம்பவம் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஓய்வு பெற்ற பிரதிப் பணிப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாலபே பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர், போலி காணி உறுதியை தயாரித்து, பாலித ரங்கே பண்டாரவுக்கு விற்பனை செய்வதற்கு முன்னர் 20 ஏக்கர் காணிக்கு போலிக் காணி உறுதியை தயாரித்து, வங்கி ஒன்றில் அடகு வைத்து 47 லட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டுள்ளதாக விசாரணைகளை நடத்தி வரும் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தனியார் வங்கி ஒன்றில் அடகு வைக்கப்பட்ட 20 ஏக்கர் காணியில் 15 ஏக்கர் காணிக்கு போலிக் காணி உறுதியை தயாரித்து, அதனை பாலித ரங்கே பண்டாரவுக்கு விற்பனை செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் பொலிஸ் குழுவினர் நடத்திய விசாரணைகளை அடுத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக குற்றயல் விசாரணை திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜி 20 அமைப்புக்கு இந்திய தலைமை: அடுத்த ஆண்டில் 200 மாநாடுகள்!

முனைவர் வைகைச்செல்வன்

உலகின் முக்கிய வளர்ச்சியடைந்த - வளர்ந்து வரும் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளின் கூட்டமைப்புதான் ஜி20 ஆகும். இந்த அமைப்பின் மாநாட்டை அடுத்த (2023) ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் இந்தியா நடத்த உள்ளது.

ஆர்ஜென்டீனா, ஆஸ்திரேலியா, பிரேஸில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, இத்தாலி, ஜப்பான், கொரிய குடியரசு, மெக்ஸிகோ, ரஷ்யா, சவூதி அரேபியா, தென்னாப்பிரிக்கா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் ஜி20 அமைப்பில் இடம் பெற்றிருக்கின்றன. இந்த அமைப்பின் தலைமைப் பதவி ஒவ்வொரு நாட்டுக்கும் சுழற்சி முறையில் வழங்கப்படுகிறது.

இந்தக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்புக்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 2022 டிசெம்பர் 1 முதல் 2024 நவம்பர் 30 வரை இந்தியா தலைமைப் பொறுப்பை வகிக்கும். இந்த நிலையில், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜி20 கூட்டமைப்பின் மாநாடு முதல் முறையாக இந்தியாவின் தலைமையில் நடைபெற உள்ளது.

தனது தலைமையில் கூட்டமைப்பு இயங்கக்கூடிய அடுத்த ஓராண்டுக்கு 200 மாநாடுகளை நடத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. இதில் சிறப்புக்குரியது, அடுத்த ஆண்டு செப்டெம்பர் 9, 10 திகதிகளில் நடைபெறவிருக்கும் ஜி20 உச்சிமாநாடாகும். இதற்கான ஜி20 தலைமைத்துவ இலச்சினை, கருத்துரு ஆகியவற்றை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டதோடு, இணையதளத்தையும் தொடங்கி வைத்திருக்கிறார்.

பொதுவாக எந்த நாட்டில் ஜி20 மாநாடு நடைபெறுகிறதோ அந்த நாட்டுக்கு ஜி20 அமைப்பின் தலைமைப் பதவி தற்காலிகமாக அளிக்கப்பட்டு வருகிறது. தொலைநோக்குப் பார்வையோடு இந்த ஜி20 உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் வழிநடத்தப்பட்டு வருகிறது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை, உலக அளவிலான அமைப்புக்குத் தலைமை வகிக்கும் வகையில் உருவாகியிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகளில் உலக அளவில் பங்களிக்க ஜி20 தலைமைத்துவம் இந்தியாவுக்கு ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்றே சொல்லலாம். ஜி20 தலைமைப் பொறுப்பை ஏற்றதில் இருந்து நாடு முழுவதும் பல இடங்களில் 32 வெவ்வேறு துறைகள் சார்ந்த சுமார் 200 கூட்டங்களை இந்தியா நடத்தும். இது இந்தியாவின் சாதனைக்கான முக்கியத் தருணமாக பார்க்கப்படுகிறது.

இந்தத் தருணத்தில் உலகம் மிகப்பெரும் சிக்கல்களையும், சறுக்கல்களையும் எதிர்கொண்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. கொள்ளை நோய்த்தொற்றுப் பரவல், உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர், பொருளாதார நெருக்கடி ஆகியவை உலக நாடுகளை அச்சமூட்டுகின்றன. இந்தோனேஷியா நாட்டின் பாலி தீவில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டில் “ஒன்றாக மீள்வோம், வலுவாக மீள்வோம்” என்ற கருப்பொருளின் கீழ் உலகளாவிய பிரச்னைகள் குறித்து, குறிப்பாக உணவு, எரிசக்தி பாதுகாப்பு, சுகாதாரம், டிஜிட்டல் பரிமாற்றம் இவை குறித்து ஜி20 கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்கள் விரிவாக ஆலோசித்தார்கள்.

அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட வல்லரசு நாடுகளை வழிநடத்தும் தலைமைப்பதவி இந்தியாவுக்கு கிடைத்திருக்கிறது. இதன் மூலம், கூட்டமைப்பு நாடுகள், தங்களுடைய வர்த்தகம், உள்நாட்டுப் பாதுகாப்பு போன்ற விவகாரங்கள் குறித்து ஏனைய நாடுகளுடன் விவாதித்துக் கூட்டமைப்பை பலப்படுத்திக் கொள்ள வாய்ப்பு உருவாகும். இக்கூட்டமைப்பில் வளர்ந்த நாடுகளும் வளரும் நாடுகளும் இணைந்து மொத்தம் 20 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

உலகப் பொருளாதாரத்தில் நிலவும் சிக்கல்கள் பற்றிப் பேசுவதற்காகத் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு பருவநிலை மாற்றம், எரிசக்தித்துறை, எதிர்பாராது உருவாகும் அசாதாரண சூழ்நிலை இவற்றைக் குறித்து விவாதிப்பதற்கும் மிகச்சிறந்த களமாக உருவாகியுள்ளது.

இந்தோஷியாவில் நடைபெற்ற இரண்டு நாள் உச்சி மாநாட்டில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் நடவடிக்கைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். இதனை உலக நாடுகளின் தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர். மேலும், அம்மா நாட்டில், இன்று மிக முக்கிய பிரச்னைகளாக உள்ள பணவீக்கம், பொருளாதார வீழ்ச்சி இவற்றை சரிசெய்வதற்கான வழிமுறைகள் குறித்தும் விவாதிக்கப் பட்டது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல் வரை பல்வேறு கருத்துருக்கள் பரிமாறப்பட்டிருக்கின்றன. நாளுக்கு நாள் உக்ரைனில் ஏற்படும் மாற்றம், அதனுடன் தொடர்புடைய உலகளாவிய பிரச்னை இவை அனைத்தும் உலகம் முழுவதும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. சர்வதேச விநியோக சங்கிலி அழிந்து வருகிறது.

அதனால், அத்தியாவசியப் பொருள்களுக்கும், அடிப்படைத் தேவைகளுக்கும் உலகம் முழுவதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அனைத்து நாடுகளின் ஏழை எளிய மக்கள் சந்திக்கும் சவால்கள் தொடர்ந்து மோசமாகி வருகின்றன. ஏற்கெனவே, அன்றாட வாழ்வு அவர்களுக்கு போராட்டம் நிறைந்தது. மேலும் மேலும் சோதனைகளை எதிர்கொள்ளும் திறன் அவர்களிடம் இல்லை.

தீர்வாக அமையும் என்று இந்திய பிரதமர் அந்த மாநாட்டில் பதிவு செய்திருப்பது பெரும் வரவேற்பைப் பெற்றது.

ஜி20 கூட்டமைப்பின் முதல் மாநாடு கிழக்காசிய நாடுகளில் பெரும் நிதி நெருக்கடி இருந்த சமயத்தில் நடத்தப்பட்டது. நிதி நெருக்கடி உலகம் முழுவதும் சிறிய பொருளாதார பின்னடைவை உண்டாக்கியது. அதனால் முதல் ஜி20 மாநாடு ஜெர்மனியின் பெர்லின் நகரில் 1999-ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்த ஜி20 மாநாட்டை ஜி8 நாடுகளின் விரிவாக்கம் என்றே சொல்லலாம். உலகின் வளர்ந்த நாடுகள், உலகில் வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட சீனா, இந்தியா,




**வட்டிவிகிதங்களின் அதிகரிப்பும், சமச்சீரற்ற பருவநிலையும், சர்வதேச வளர்ச்சியின் மந்த நிலையும் மிக முக்கிய காரணிகளாகத் திகழ்கின்றன. இவை குறித்து வருகின்ற ஜி20 மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படலாம்**

ஐக்கிய நாடுகள் போன்ற பல்வேறு அமைப்புகளும், இதுபோன்ற பிரச்னைகளைத் தீர்ப்பதில் வெற்றி பெறவில்லை என்பதை ஒப்புக்கொள்ள நாம் தயங்கக்கூடாது. இதற்கான தகுந்த சீர்திருத்தங்களைக் கொண்டு வர நாம் அனைவரும் தவறிவிட்டோம். எனவே, ஜி20 மாநாட்டின் நடவடிக்கைகள் குறித்து உலகம் முழுவதும் மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. ஜி20 கூட்டமைப்பின் செயல்பாடு முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் திகழ்கிறது. இதனைத்தான் இந்திய பிரதமர் இந்தோனேஷியாவின் பாலி தீவில் குறிப்பிட்டார். அக்கருத்தை முக்கியமான ஒன்றாக நாம் பார்க்கலாம்.

கொள்ளை நோய்த்தொற்றின்போது தனது 1.3 பில்லியன் மக்களுக்கு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தது இந்தியா என்பது மிக முக்கியமான செய்தியாகும். அதே நேரத்தில், பல்வேறு நாடுகளுக்கும் உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டன. இன்றைய உரத் தட்டுப்பாடு நாளை உணவுதட்டுப்பாட்டுக்கு வித்திட்டுவிடும். இது நடக்கும்போது இதற்கான தீர்வு உலகநாடுகளிடம் இருக்காது.

ஆக, உணவு மற்றும் உணவுத்தானியங்களின் விநியோக சங்கிலியை தொடர்ந்து நிலைநிறுத்துவதற்கான செயல்பாடுகளை நாம் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். உணவு பாதுகாப்பிற்காக இந்தியாவில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதோடு, சிறுதானியங்கள் போன்ற ஊட்டச்சத்து மிக்க, பாரம்பரிய உணவு தானியங்களையும் மக்களிடையே பிரபலப்படுத்த வேண்டும்.

உலகளாவிய அளவில் காணப்படும் ஊட்டச்சத்து குறைபாடு, பசி ஆகிய பிரச்னைகளுக்கு சிறுதானியங்கள்

பிரேஸில் போன்ற நாடுகளை இணைத்து உருவாக்கியதுதான் இந்த ஜி20. தொடக்கத்தில் இந்த ஜி20 மாநாடுகளில், உறுப்பு நாடுகளின் நிதியமைச்சர்கள், நாட்டின் மத்திய வங்கித் தலைவர்கள் ஆகியோர்தான் சந்தித்து வந்தார்கள். ஆனால், 2008-இல் ஏற்பட்ட பொருளாதார சரிவிற்குப் பின் ஜி20 உறுப்பு நாடுகளின் அதிபர்கள், பிரதமர்கள் என அனைத்து பெரிய தலைவர்களும் சந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இது ஜி20 மாநாடுகளின் முக்கியத்துவத்தைத் தலைவர்கள் உணர்ந்திருப்பதைக் காட்டுகிறது.

நாட்டின் பொருளாதார மற்றும் நிதி சார்ந்த விஷயங்களைப் பேசுவதோடு நின்று விடாமல், உறுப்பு நாடுகள் கொண்டு வரும் பெரிய திட்டங்களுக்கு மற்ற நாடுகளின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கேட்டுப் பெறுவதே இந்த சந்திப்பின் முக்கிய அம்சமாக அமைந்தது.

எரியும் வர்த்தகப் போர், பருவநிலை மாற்றம், ஈரான் நாட்டுடனான உறவு, உலகப் பொருளாதாரம் இவை குறித்து மிக முக்கியமாக இந்த ஆண்டு உச்சி மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. 2023ஆம் ஆண்டு உலகப் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை ஜூன் மாதம் முதல் 3 விழுக்காட்டில் இருந்து 1.9 விழுக்காடாகக் குறைந்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

பணவீக்கம், வட்டிவிகித உயர்வு, கடன் அதிகரிப்பு உள்ளிட்ட பிரச்னைகளால் வளர்ந்து வரும் நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. டொலர் மதிப்பீட்டு பொருளாதார வளர்ச்சிக் கணக்கீட்டில் அமெரிக்கா, சீனா ஜப்பான் ஜெர்மனிக்கு அடுத்தபடியாக இந்தியப் பொருளாதாரம் இருக்கிறது. இவை, பிரிட்டன் ஆட்சி மாறி, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் பிரதமருக்கு பெரும் சவாலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பாண்டில் இந்தியாவின் பொருளாதார வீழ்ச்சி 7.7சதவீதமாக சரியும் என பொருளாதார கணிப்பு சுட்டிக்காட்டுகிறது. இதற்கு வட்டிவிகிதங்களின் அதிகரிப்பும், சமச்சீரற்ற பருவநிலையும், சர்வதேச வளர்ச்சியின் மந்த நிலையும் மிக முக்கிய காரணிகளாகத் திகழ்கின்றன. இவை குறித்து வருகின்ற ஜி20 மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(கட்டுரையாளர்: முன்னாள் அமைச்சர்.)

# பெண்களின் ‘எதிர்காலத்தை’ அழிக்கும் தலிபான்கள்
## ஆப்கானின் கண்ணீர் கதைகள்!




தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஆப்கானிஸ்தான் முழுவதும் சிறுமிகளும் பெண்களும் எதை நினைத்து அஞ்சிக் கொண்டிருந்தார்களோ அந்த உத்தரவு வந்துவிட்டது.

புதன்கிழமையன்று, ஹிஜாப் அணிந்த பெண்கள் தங்கள் பல்கலைக்கழக வளாகங்களுக்குச் சென்றபோது, தாலிபன் காவலர்களால் தடுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அப்படி திருப்பி அனுப்பப்படும்போது அவர்கள் அழுதுகொண்டே செல்வதைக் காட்சிகள் காட்டுகின்றன.

கடந்த 16 மாதங்களில் பெரும்பாலான மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து பெண்களை ஒதுக்கிய தாலிபன்கள், இந்த வாரம் பெண்களுக்கான பல்கலைக்கழக கல்வியையும் தடை செய்துள்ளனர்.

“என்னுடைய எதிர்காலத்துடன் என்னை இணைப்பதற்கு இருந்த ஒரே பாலத்தையும் அவர்கள் அழித்துவிட்டனர்,” என்று காபூல் பல்கலைக்கழக மாணவி ஒருவர் கூறியுள்ளார்.

“நான் இதை எப்படி எடுத்துக்கொள்வது? கல்வியின் மூலம் என் எதிர்காலத்தை மாற்ற முடியும், என் வாழ்க்கையில் ஒளியைக் கொண்டு வர முடியும் என்று நம்பினேன். ஆனால், அவர்கள் அதை அழித்துவிட்டார்கள்,” என்று கூறினார்.

அதிகாரிகள் செவ்வாய்க்கிழமையன்று இந்த உத்தரவைப் பிறப்பித்தனர். மறுநாள் இஸ்லாமிய மதப் பள்ளிகள் மற்றும் பல மாகாணங்களிலுள்ள தனியார் கல்லூரிகள் உட்பட பிற கல்விக்கூடங்களும் இந்த உத்தரவை நிறைவேற்றின.

வடக்கில் தகார், தென்கிழக்கில் கஜினி, தலைநகர் காபூல் ஆகிய மூன்று மாகாணங்களில் கிடைத்த தகவல்கள், அங்குள்ள தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதை தாலிபன்கள் தடுத்துள்ளதை உறுதி செய்தன.

பெண்கள் முறையான கல்வியை அணுகுவதற்கான அனைத்து வழிகளும் மூடப்பட்டு வருகின்றன.

சில பெண்கள் புதன்கிழமையன்று காபூல் தெருக்களில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். எதிர்ப்பு தெரிவித்த பெண்களைத் தடுத்து நிறுத்திய தாலிபன்களைப் பொறுத்தவரை இது மிகவும் ஆபத்தான செயல். நடைபெற்ற சிறிய ஆர்ப்பாட்டங்கள் தாலிபன் அதிகாரிகளால் விரைவில் தடுக்கப்பட்டன.

தங்களுடைய மூத்த சகோதரிகள், அம்மாக்கள், உறவினர்களுக்கு கல்வி மறுக்கப்பட்ட நிலையில், இப்போதைய தலைமுறையினர் அதிர்ஷ்டசாலிகள் என்று நினைத்தார்கள். ஆனால் அதற்கு மாறாக தங்கள் எதிர்காலம் சிதைக்கப்படுவதைக் காண்கிறார்கள்.

கடுமையான இஸ்லாமிய போராளிக் குழுவாகத் தொடங்கிய தாலிபன், கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் மீண்டும் ஆட்சிக்கு வந்தது. பெண்கள் வேலை செய்யவோ படிக்கவோ முடியாத, 1996-2001 வரையிலான அவர்களுடைய முந்தைய ஆட்சியின் கொடூரத்திற்குப் பிறகு, இந்த முறை பெண்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதாக உறுதியளித்தது.

ஆனால், ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தலைமையிலான படைகள் வெளியேறி, தலிபான்கள் ஆட்சிக்குத் திரும்பிய பிறகு, பெண்களுக்கு வழங்கப்பட்ட சின்னச் சின்ன சுதந்திரங்கள், உரிமைகள் என்று அனைத்தையும் அவர்களுடைய சமீபத்திய ஆணை மீண்டும் பறிக்கிறது.

இருந்தும் மூன்று மாதங்களுக்கு முன்பு தான், தலிபான்கள் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுகளை நடத்த அனுமதித்தனர்.

நாடு முழுவதும் உள்ள மாகாணங்களில் ஆயிரக் கணக்கான சிறுமிகள், பெண்கள் தேர்வு எழுதினார்கள். அதில் பலர், வீட்டிலிருந்தோ அல்லது பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ள மறைவான கல்லூரிகளுக்கு



அபாயங்களுக்கு நடுவே சென்றோ ரகசியமாகப் படித்தவர்கள்.

ஆபத்து நிலவிக்கொண்டே இருந்தது. சில தேர்வுகளின்போது பள்ளிகளைக் குறிவைத்து வீசப்பட்ட வெடிகுண்டுகளால் மாணவர்கள் உயிரிழந்தனர். ஆனாலும் இளம்பெண்கள் விடாப்பிடியாக இருந்தார்கள்.

நவம்பர் மாத இறுதியில், தலிபான்கள் கடைசி நேரத்தின்போது பாடங்கள் மீதான கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தார்கள். பொருளாதாரம், இதழியல் போன்ற படிப்புகளில் இருந்து பெண்களை அந்தக் கட்டுப்பாடுகள் தடுத்தன. அப்போதும், அவர்கள் தொடர்ந்து முயன்றனர். பலர் கற்பித்தல், மருத்துவம்




ஆகியவற்றுக்கு விண்ணப்பித்தனர்.

“எப்போதும் நாங்கள் ஏன் பலியாகிக் கொண்டிருக்க வேண்டும்? ஆப்கன் ஒரு ஏழை நாடு. ஆனால், இந்த நாட்டிலுள்ள பெண்கள் மற்ற அனைத்துப் பிரச்னைகளுடன் வறுமையையும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதோடு அவர்கள் இன்னமும் கஷ்டப்பட வேண்டும்,” என்று ஒரு மாணவி கூறினார்.

பெண்களின் பள்ளிப்படிப்பு நீண்ட காலமாக தலிபானில் உள்ள பழைமைவாத, மிதவாத பிரிவுகளுக்கு இடையில் ஒரு சர்ச்சைக்குரிய புள்ளியாக இருந்து வருகிறது.

பல்கலைக்கழகத் தடை இப்போது தாலிபனிலுள்ள அடிப்படைவாதிகளின் வெற்றியைக் குறிக்கிறது. அதன் உச்ச தலைவர் ஹிபத்துல்லா அகுந்த்சாதா, குறிப்பாக பெண்கள், சிறுமிகளுக்கான இஸ்லாமிய போதனை களின்படி நவீன கல்வி தவறானது என்று நம்புகிறார்.

இருப்பினும்கூட, ஆளும் தாலிபன் இயக்கத்திலுள்ள அனைவரும் அவரைப் போல் நினைக்கவில்லை. அதோடு காபூல் போன்ற நகரங்களில் உள்ள மிதவாத அதிகாரிகள் 12 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் கல்வி பெறுவதை விரும்புவதாக செய்திகள் கூறுகின்றன.

உரிமைகள் தொடர்பான வழக்கறிஞர்கள் எச்சரித்துள்ளதன்படி, இந்த முடிவு மொத்த நாட்டின் எதிர்காலம் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும். “எந்தவொரு நாடும் அதன் மக்கள்தொகையில் பாதியை பின்னுக்குத் தள்ளினால் செழித்து வளர முடியாது,” என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அந்தோனி பிளிங்கன் எச்சரித்துள்ளார்.

தாலிபன்கள் உலக அங்கீகாரம் பெற வேண்டுமென்றால், பெண் கல்வியை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனையை மேற்கத்திய நாடுகள் வலியுறுத்தின. இருப்பினும் தாலிபன்கள் இதுவரை விமர்சனங்களைப் புறக்கணித்து வருகின்றனர்.

தங்கள் மகள்களின் எதிர்காலம் மீண்டும் “இருண்ட யுகத்தை” நோக்கிச் சறுக்குவது, நாட்டிலும் உலகமெங்கி லும் உள்ள ஆப்கானிய குடும்பங்களிடையே அச்சத்தையும் கோபத்தையும் தூண்டியுள்ளது.

பல்கலைக்கழக தடை பற்றிய செய்தி சில ஆப்கன் பெண் ஆர்வலர்களை, தங்களுடைய பல்கலைக்கழக பட்டப்படிப்பு நாட்களின் நினைவுகளை வெளியிடத் தூண்டியது.

தாலிபன்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியதிலிருந்து அவர்களுக்கு எதிரான எதிர்ப்பு போதுமானதாக இல்லையென்று அவர்கள் கூறுகிறார்கள்.

இது சமீபத்திய நாட்களில் பெண்களின் அன்றாட வாழ்வில் அதிகரித்து வரும் கட்டுப்பாடுகளின் ஒரு பகுதி. நவம்பர் மாதம், காபூலில் பெண்கள் பூங்காக்கள், உடற்பயிற்சி கூடங்கள் போன்ற பொது இடங்களுக்குள் நுழைவதும் தடுக்கப்பட்டது. சிறையில் அடைக்கப்படுவதற்கு நிகரான கொள்கைகளால், பெண்கள் தங்கள் வீடுகளில் அடைத்து வைக்கப்படுவது அதிகரிப்பதாக ஐநா கூறுகிறது.

ஒரு சட்டக்கல்லூரி மாணவிக்கு, அவரது உயர்கல்வி பாதை இப்போது முடிந்துவிட்டது. அவருடைய பல்கலைக்கழக காலம் குளிர்கால இடைவேளை முடிவடைந்து மீண்டும் தொடங்கப்படவில்லை.

இந்நிலையில், இப்போது அவர் மீண்டும் வளாகத்திற்குள் காலடி எடுத்து வைக்க அனுமதிக்கப்படவில்லை. அவர் “அனைத்தையும் இழந்துவிட்டார்.” ஷரியா சட்ட அறிஞரான அவர், இஸ்லாமிய போதனைகளின்படி அதைப் புரிந்துகொள்ளப் போராடுவதாக கூறினார்.

“இஸ்லாமும் அல்லாஹ்வும் எங்களுக்கு வழங்கிய உரிமைகளை தலிபான்கள் பறித்துள்ளனர்,” என்று அவர் கூறினார்.

“வேறு இஸ்லாமிய நாடுகளுக்குப் போய் அவர்களுடைய செயல்கள் இஸ்லாத்தின்படி இல்லையா எனப் பார்க்க வேண்டும். அவர்கள் சொல்வதன்படி, இது ஷரியா. ஆனால் பெண்களிடம் மட்டும் இதை ஏன் நடைமுறைப்படுத்த விரும்புகிறார்கள்? ஏன் ஆண்களுக்கு இது கொண்டுவரப்படவில்லை?”

மற்ற மத அறிஞர்களும் அவரது கருத்தை ஆதரிக்கின்றனர். சில ஆப்கனிய பெண் மத அறிஞர்களில் ஒருவரான நவிதா குராசானி, இந்த உத்தரவு இஸ்லாமிய விழுமியங்களை மீறுவதாகக் கூறுகிறார். “இஸ்லாத்தில் இதற்கு இடமில்லை. ஏனெனில், இஸ்லாத்தின்படி ஆண்கள், பெண்கள் இருவரும் கல்வி கற்க வேண்டும்,” என்று இப்போது கனடாவில் வசிக்கும் நவிதா கூறினார்.

மற்றொரு மத அறிஞரான, ஆப்கனில் வசிக்கும் ஓர் ஆண் இமாம், ஆண்களும் பெண்களும் இஸ்லாத்தின் கீழ் கல்வி கற்க முடியும் என்பதை ஒப்புக்கொண்டார்.

இருப்பினும், பல ஆப்கான் அவதானிப்பாளர்களைப் பொறுத்தவரை, இஸ்லாமிய போதனைகளின் கீழ் தலிபான்களின் செயல்களை விளக்க முயல்வதில் எந்த



அர்த்தமும் இல்லை. தாலிபன் ஆட்சிக்கு இடைப்பட்ட ஆண்டுகளில் பெண்களை முற்றிலுமாக ஒடுக்கி, அவர்களுக்கு இருந்த சுதந்திரத்தை அழிக்கும் இயக்கத்துடைய நோக்கங்களின் தொடர்ச்சி தான் பல்கலைக்கழகத் தடை என்று அவர்கள் கூறுகின்றனர்.

தலிபான்கள் பெண்கள் மீதான தங்கள் கட்டுப்பாட்டை இறுக்குவதே, பல்கலைக்கழக கல்விக்கான கதவுகளை மூடும் செயல்.

“ஆப்கானிஸ்தான் பெண்களுக்கான நாடு இல்லை, பெண்களுக்கான கூண்டு,” என்று அமெரிக்காவில் வசிக்கும் ஆப்கானிஸ்தான் கல்வியாளரும் ஆர்வலருமான ஹுமைரா காதேரி கூறினார்.

மேலும் அவர், “ஆப்கன் பெண்களுக்கு சமூக வாழ்க்கை எதுவுமில்லை. தெருக்களில் இப்போது ஆண்களே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இது தலிபான்களால் செய்ய முடிந்த கடைசி விஷயம். ஆனால், அதையும் அவர்கள் செய்தார்கள்,” என்று கூறினார்.

# விமர்சனங்கள் அல்ல தீர்வு திட்டங்களே தேவை!

## வேலுகுமார் எம். பி. அறிவுரை

கொழும்பு, டிசெ. 24

விமர்சனங்களை விட தீர்வு திட்டங்களே காலத்தின் தேவையாக உள்ளது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் வறுமை நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. நகரம் கிராமம் மற்றும் பெருந்தோட்ட பகுதி என பாகுபடுத்தி பார்க்கின்ற போது, பெருந்தோட்ட பகுதிகளின் வறுமை நிலை உக்கிரம் அடைந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் விமர்சனங்களை விட தீர்வு திட்டங்களே காலத்தின் தேவையாக உள்ளது. இன்று நாட்டில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் உணவு பற்றாக்குறை பிரச்னையை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக மலையக பெருந்தோட்ட பகுதிகளில் இந்நிலைமை இரண்டில் ஒரு பகுதியினராக உள்ளது. உணவு பற்றாக்குறை மற்றும் மந்த போசன நிலைமை மலையக பெருந்தோட்ட பகுதிகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலைமையின் தொடர்ச்சியான தன்மை பெரும் சமூகப் பிரச்னையை தோற்றுவிக்கக் கூடிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றது.

முழு நாட்டிலும் ஏற்பட்டுள்ள உணவு பற்றாக்குறை பிரச்சினையை விட அதிகமான தாக்கம் மலையக பெருந்தோட்ட பகுதிகளில் உள்ளது.



பாடசாலை மாணவர்களின் வருகையிலும் இந்தத் தாக்கத்தை காண முடிகின்றது. இப் பிரச்னையை நாம் மூடி மறைத்துக் கொண்டிருக்க முடியாது. இன்று தீரும் நாளை தீரும் என காலத்தை இழுத்தடிக்க முடியாது. ஒருவருக்கு ஒருவர் குற்றஞ்சாட்டி விமர்சனம் செய்வதால் தீர்வு கிடைக்கப்போவதில்லை.

தற்போது ஜனாதிபதி முன்வைத்திருக்கும் உணவு பாதுகாப்பு திட்டத்துக்கு அப்பால் சென்று மலையக பிரதேசத்துக்கான விசேட திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். அதற்கான அரச மட்ட பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று அல்லாது இவ்வேலை திட்டத்தில் அரசு முன்வைக்கும் சாதகமான விடயங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும். அதன் போது மட்டுமே இப் பிரச்னைக்கு தீர்வொன்றை தேடிக்கொள்ள முடியும். அவ்வாறில்லாது அரசாங்கத்தை மட்டும் குறைக்கூறி விமர்சனம் செய்வதால் எவ்வித தீர்வும் மக்களுக்கு கிடைக்கப்போவதில்லை - என தெரிவித்துள்ளார். (ஐ)

# மின்சார கட்டணத்தை அதிகரித்தால் மக்களுடன் வீதியில் இறங்குவோம்!

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 24

பொருளாதார நெருக்கடிகளால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் மக்கள்மீது மீண்டும் பெரும் சுமையை சுமத்தும் வகையில் மின்சார கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. அவ்வாறு மீண்டும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் மக்களை வீதிக்கு இறக்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

மீண்டும் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டால் நாம் மக்களை வீதிக்கு இறக்குவோம். சமூகத்தில் மிகக் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கே பெருமளவில் மின் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது. அதிக வருமானம் கொண்டவர்களுக்கு சிறிய தொகையே அதிகரிக்கப்படவுள்ளது.

அதே போன்று தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாயின் , அதற்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுப்போம். வேட்புமனு தாக்கலுக்கான தினத்தை அறிவித்தல், அதனைத் தொடர்ந்து வேட்புமனு தாக்கல் செய்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதால், அடுத்த இரு வாரங்களுக்குள் தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட வேண்டும்.

தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டு , அதன் பின்னர் பொருளாதார நெருக்கடிகளைக் காரணமாகக் காண்பித்து தேர்தலை காலம் தாழ்த்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள், ராஜபக்ஷக்களேயன்றி பொது மக்கள் அல்ல என்பதை அரசாங்கத்துக்கு நினைவுபடுத்துகின்றோம் - என்றார். (ஐ)

# தாமதமாக சென்ற அமைச்சர் மீண்டும் சர்ச்சைக்குள்ளானார்!

கொழும்பு, டிசெ. 24

நாட்டின் அமைச்சர்கள் கூட்டங்களுக்கு தாமதமாக வந்ததாக கொரிய அதிகாரி ஒருவர் கடுமையாக விமர்சித்ததை அடுத்து, சமூக ஊடகங்களில் தமக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் காணொலி பகிரப்பட்டு வருவதாகக் கூறி குற்றப் புலனாய்வுத் துறைக்கு செல்லவுள்ளதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் கூறியிருந்தார். ஆனால், அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்திலும் முன்னிலையாக தவறிவிட்டார்.

தாம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு இன்று (நேற்று) பிற்பகல் 1.50க்கு செல்லப் போவதை செய்தியாக்க வருமாறு அவரின் அமைச்சு ஊடகங்களுக்கு அவர் அறிவித்திருந்தார்.

ஆனால், அவர் பிற்பகல 2.30 மணியாகியும் கூட அங்கு செல்லவில்லை. இதைத் தொடர்ந்து அவரை ஊடக தரப்பினர் தொடர்பு கொண்ட போதும் அவர் பதிலளிக்கவில்லை. தொடர்ந்து அவர் குற்றப்புலனாய்வு பிரிவுக்கும் செல்லவில்லை என்று கூறப்படுகின்றது.

இதே இராஜாங்க அமைச்சர் கடந்த புதன்கிழமை கொழும்பில் திட்டமிடப்பட்ட கூட்டத்துக்கு 30 நிமிடங்கள் தாமதமாக வந்ததற்காக கொரிய அதிகாரி ஒருவர் பகிரங்கமாக கடுமையாக கண்டனம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்வி tv CHANNEL-1**

**24.12.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

**கல்வி tv CHANNEL - 2**

**24.12.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## விபுலானந்தா மத்திய கல்லூரியில் 4 ஆசிரியர்களுக்குப் பிரியாவிடை

அம்பாறை, டிசெ. 24

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியை திருமதி யோகேஸ்வரி இரவீந்திரன், ஆசிரியை திருமதி கலாமணி நடராஜா, ஆசிரியை திருமதி நிர்மலாதேவி புண்ணியநேசன் மற்றும் ஆசியர் த. பிரபாகரன் ஆகிய ஆசிரியர்களை கௌரவப்படுத்தி வாழ்த்தும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் ம. சுந்தரராஜன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாணவ மாணவிகள் அவ்வாசிரியர்களின் ஆசிர்வாதங்களை பெற்றனர்.

ஆசிரியர்களும் வாழ்த்துக்களை தெரிவித்து ஆசீர்வாதங்களைப் பெற்றனர்.

ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியர்கள் தொடர்பாக சேவைகளை பாராட்டிய அதிபர் ஆசிரியர்கள், அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். (அ)

# மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம்

## எதிர்க்கட்சித் தலைவர் கையளித்தார்

மட்டக்களப்பு, டிசெ. 24

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் திருமதி க.கலாரஞ்சினி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் மூச்சு வேலைத்திட்டத்திட்டத்தின் ஊடாக சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம் ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வழங்கினார்.



இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் அமைச்சர்களான அமீர் அலி, கணேசமூர்த்தி உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# ஒரு தொகை வெடிபொருட்களுடன் திருகோணமலையில் ஒருவர் கைது!

திருமலை, டிசெ. 24

திருகோணமலை - ஈச்சிலம்பற்று பகுதியில் ஒரு தொகை வெடிபொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இலங்கைத்துறை முகத்துவாரம் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து குறித்த வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது 47 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

ஈச்சிலம்பற்று விசேட புலனாய்வுப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சந்தேகநபரின் வீடு சோதனைக்குட்படுத் தப்பட்டுள்ளது.

இதன்போது வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகநபரை மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.(அ)

# தமிழக ஓவியர் பத்மவாசன் நாவிதன்வெளிக்கு விஜயம்





அம்பாறை, டிசெ. 24

உலகப் புகழ்பெற்ற ஓவியர் மு. பத்மவாசன் நாவிதன்வெளி பிரதேசத்திற்கு நேற்று முன் தினம் விஜயம் செய்தார்.

அங்கு அவர் நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் சித்திரபாட மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வரைதல் பயிற்சி பட்டறையை நடத்தினார்.

பாடசாலை அதிபர் சீ.பாலசிங்கனின் வரவேற்பில் பாடசாலை இணைப்பாளரும் உதவி கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

"அறநெறி ஒழுக்கமுள்ள மனிதனை உருவாக்கும்" அறநெறி ஓவியங்களூடாக இறைவனை காணுதல்" என்னும் தொனிப்பொருளில் அவர் இப்பட்டறையை நடத்தினார்.

நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன் அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இந் நிகழ்வில் ஓய்வு நிலை ஆசிரியர் வி.மகேஸ்வரன் பிரதி அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் உதவி அதிபர் என். வன்னியசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

அம்பாறை மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜீ முன்னதாக உலக ஓவியர் மு. பத்மவாசன் தொடர்பான அறிமுக உரை நிகழ்த்தினார்.

அறநெறி வகுப்புகளுக்கு இதுவரை செல்லாத மாணவர்களை அறநெறிக்கு ஈர்க்கும் வகையில் ஓவியர் பத்மவாசனின் உரை அமைந்திருந்தது. (அ)

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு: கால்நடை வைத்தியர் கைது

மட்டக்களப்பு, டிசெ. 24

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கால்நடை வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - கரடியனாறு, கால்நடைவள திணைக்களத்தில் பணியாற்றும் மிருக வைத்திய அதிகாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளே குறித்த வைத்தியரை கைது செய்தனர்.

இலுப்படிச்சேனை எனும் இடத்தில் உள்ள கால்நடைப் பண்ணை ஒன்றில் பசு ஒன்றுக்கு ஊசி ஏற்றுவதற்காக 26,000 ரூபா இலஞ்சம் பெற்றதாகக் கூறி இந்த கைது இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலஞ்ச ஒழிப் புத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஹெரோயின் வலைப்பின்னலை தேடி விசேட அதிரடிப்படையினர் வேட்டை!

## ஹெரோயினுடன் ஆடம்பர வாகனங்கள் மீட்பு

அம்பாறை, டிசெ. 24

ஆடம்பர வாகனங்களில் ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்தி வந்த குழுவினரை திருக்கோவில் விசேட அதிரடிப் படையினர் தேடி கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று இராணுவ புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து திருக்கோவில் விசேட அதிரடிப்படையினர் இந்நடவடிக்கையை மேற்கொண்டு இரு வாகனங்களுடன் 50 கிராம் 139 மில்லி கிராம் ஹெரோயின் வைத்திருந்த 36 வயது சந்தேக நபரை வியாழக்கிழமை நள்ளிரவு கைது செய்து கல்முனை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.



இவ்வாறு கல்முனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட வாகனங்களில் ஒரு வான் மற்றும் கார் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த நடவடிக்கையின்போது தப்பிச் சென்ற சந்தேக நபர்கள் மற்றும் வாகன உரிமையாளர்கள் என இனங்காணப்பட்டவர்களின் வீடுகள் அமைந்துள்ள பகுதிகள் விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸாரினால் கல்முனை பகுதியில் சோதனை மேற்கொள்ளப்பட்டன.

மேலும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் வீதியில் நேற்று காலை கார் ஒன்றிலிருந்து 'ஐஸ்' போதைப்பொருள் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



# அமெரிக்காவில் கடும் பனிப்புயல்

## 2,200 விமானங்கள் இரத்து

நியூயோர்க், டிசெ. 24

அமெரிக்காவில் வீசிய பனிப்புயல் காரணமாக, நாடு முழுவதும் குறைந்தபட்சம் 2,200 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்க தேசிய வானிலை சேவை இதை "தலைமுறைக்கு ஒருமுறை நடக்கும் நிகழ்வு" என்று குறிப்பிட்டது.

கிறிஸ்மஸ் வார இறுதியிலும் கடுமையான பனிப்பொழிவு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது சுமார் 40 ஆண்டுகளில் மிகவும் குளிரான கிறிஸ்மஸ் ஆகும் என்று முன்னறிவிப்பாளர்கள் கூறுகின்றனர்.

கடந்த வியாழனன்று மதியம் ஒரு மணிக்குள் 2,200 அமெரிக்க விமானங்களை விமான நிறுவனங்கள் ரத்து செய்ததால் கிறிஸ்மஸ் விடுமுறையை தங்கள் அன்புக்குரியவர்களுடன் செலவிட எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை 900 க்கும் மேற்பட்ட விமானங்களை முன்கூட்டியே ரத்து செய்ததாக விமான கண்காணிப்பு தளமான பிளைட் அவேர் தெரிவித்துள்ளது.

வியாழன் அன்று விமானம் ரத்து செய்யப்பட்டதால் சிகாகோ மற்றும் டென்வர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக பிளைட் அவேர் தரவு காட்டுகிறது.

சிக்காக்கோவின் ஓ'ஹேர் சர்வதேச விமான நிலையத்தில், விமானங்கள் சராசரியாக 159 நிமிடங்கள் தாமதமாகின்றன.

பனிப்பொழிலார் விமான பயணங்களை கடுமையாக்கியது என மத்திய விமான போக்குவரத்து நிர்வாகம் ஓர் அறிவிப்பில் கூறியதாக சி.என்.என். தெரிவித்துள்ளது.

மேலும் பயண இடையூறுகளை எதிர்பார்த்து, யுனைடெட், டெல்டா மற்றும் அமெரிக்கன் போன்ற முக்கிய விமான நிறுவனங்கள், தங்கள் விமானங்களை மாற்றியமைக்க விரும்பும் பயணிகளுக்கு கட்டணத்தை தள்ளுபடி செய்யத் தொடங்கியுள்ளன.

வியாழனன்று, ஜனாதிபதி ஜோ பிடன், கிறிஸ்மஸ் வாரத்தில் பயணம் செய்யும் அமெரிக்க குடிமக்கள் கவனமாக இருக்கவும், பல மாநிலங்களை தாக்கும் என்று எதிர்பார்க்கப்படும் பாரிய புயலைத் தவிர்க்க முடிந்தால் சீக்கிரம் வெளியேறவும் எச்சரித்தார். (அ)

# இந்திய பாராளுமன்றில் மீண்டும் முகக்கவசம்!



புதுடில்லி, டிசெ. 24

இந்திய பாராளுமன்றத்தின் கீழவையான லோக்சபா சபாநாயகர் ஓம் பிர்லா, எம்.பிக்கள் அனைவரும் முகக்கவசம் அணியவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

சீனாவில் பரவி வரும் பி.எப் 7 கொரோனா தொற்று குஜராத், ஒடிசா மாநிலங்களில் மொத்தம் 4 பேருக்கு கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், லோக்சபா சபாநாயகர் ஓம் பிர்லா, எம்.பி.க்கள் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள், மற்றும் எம்.பி.க்கள் முகக்கவசம் அணிந்து பாராளுமன்ற கூட்டத்தில் பங்கேற்றனர். (அ)

# கொரோனா சீனாவில் தாண்டவம்!



## வைத்தியசாலையில் குவியும் தொற்றாளர்கள்

பீஜிங், டிசெ. 24

சீனாவில் புதிய கொரோனா அலை தாக்கியிருக்கும் நிலையில் அங்குள்ள மருத்துவமனைகள் நிரம்பி வருவதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கோவிட்-19 தொற்று சம்பவங்கள் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதாக சீனா கூறியபோதும் அவசர சிகிச்சை பிரிவுகள் அதிக பணிச்சுமையை எதிர்கொண்டிருப்பதாக உலகக் சுகாதார அமைப்பின் அவசரகாலத் திட்டத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மருத்துவர் மைக்கல் ரியான் தெரிவித்துள்ளார்.

சீனாவின் கணக்கெடுப்பின்படி கடந்த புதன்கிழமை நோய்த் தொற்றினால் எவரும் உயிரிழக்கவில்லை என்று குறிப்பிட்டபோதும் நோயின் உண்மையான பாதிப்புக் குறித்து சந்தேகம் எழுந் துள்ளது.

கோவிட் தொற்று தீவிரம் அடைந்த நிலையில் தலைநகர் பீஜிங் மற்றும் ஏனைய நகரங்களில் மருத்துவமனைகள் அண்மைய நாட்களில் நிரம்பி வருகின்றன.

2020 தொடக்கம் சீனா கொரோனா தொற்றுக்கு எதிராக கண்டிப்பான கட்டுப்பாடுகளை விதித்து வந்தது. எனினும் இந்தக் கட்டுப்பாடுகளை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்த ஆரம்பித்ததை அடுத்து இரண்டு வாரங்களுக்கு முன்னர் பெரும்பாலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து தொற்றுச் சம்பவங்கள் அதிகரித்ததோடு, அதிகம் பாதிக்கக்கூடிய வயதானவர்களிடையே உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக அஞ்சப்படுகிறது.

சீனாவில் இறுதிச்சடங்குக் கூடங்கள் நெருக்கடியை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது. இருப்பினும், சீனா அதிகாரபூர்வமாக வெளியிடும் கொவிட் மரண எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரிக்கவில்லை. மாறாக, கடந்த செவ்வாயன்று சீனா அதன் உயிரிழப்பு எண்ணிக்கையை ஒன்று குறைத்து 5,241ஆக மாற்றியது.

இந்நிலையில் புதிய நோய் பரவல் குறித்த விவரங்களை வெளியிடும்படி மருத்துவர் ரியான் சீனாவை வலியுறுத்தியுள்ளார். 'அவசர சிகிச்சைப் பிரிவுகளில் நோய் சம்பவங்கள் குறைவாக இருப்பதாக சீனா கூறியபோதும், தெரியவரும் தகவல்கள் படி அவை நிரம்பி வருகின்றன' என்று குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் நிலைமை கவலை அளிப்பதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோ அதனோம் கெப்ரியேஸ் முன்னதாகக் குறிப்பிட்டிருந்தார். (அ)



# சரணடையமாட்டோம்!

## உக்ரைன் ஜனாதிபதி திட்டவட்டம்

கீவ், டிசெ. 24

"நாங்கள் ஒருபோதும் சரண் அடைய மாட்டோம்" என்று அமெரிக்க பாராளுமன்றத்தில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி சபதமிட்டார்.

போருக்கு மத்தியில் அமெரிக்கா சென்ற உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி, அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் உரையாற்றினார்.

அப்போது அவர் நாங்கள் ஒரு போதும் சரண் அடையமாட் டோம் என்று சபதமிட்டார்.

உக்ரைன் மீது ரஷியா தொடுத்துள்ள போர் 300 நாட்களைக் கடந்து சென்று கொண்டிருப்பதால் அது உலகளவில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது. இந்த போருக்கு மத்தியில் உக்ரைன் நாட்டின் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி நேற்று முன்தினம் அமெரிக்காவுக்கு சென்றது, உலகளவில் பேசுபொருளாகி இருக்கிறது. அவர் போலந்து நாட்டின் ரெஸ்சோவ் நகரில் இருந்து அமெரிக்காவின் போர் விமானத்தில்தான் அங்கு சென்றார்.

அங்கு அவருக்கு ஒரு மாபெரும் ஹீரோவுக்குரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. வெள்ளை மாளிகை ஓவல் அலுவலகத்தில் அவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனைச் சந்தித்து பேசினார். அப்போது அவர் உக்ரைனிய ராணுவ பதக்கத்தை ஜோ பைடனிடம் வழங்கினார்.

இருவரும் கூட்டாக நிருபர்களை சந்தித்தனர். அப்போது ஜெலன்ஸ்கியிடம் ஜோ பைடன், "இந்த பயங்கரமான நெருக்கடியில் உங்கள் தலைமை, நீங்கள் செய்திருக்கும் செயல்கள் உக்ரைன் மக்களையும், அமெரிக்க ஜனாதிபதியையும், அமெரிக்க மக்களையும், ஒட்டுமொத்த உலகையும் ஈர்த்துள்ளது" என புகழாரம் சூட்டினார்.

உக்ரைனுக்கு அமெரிக்கா செய்த பெரும் உதவிகளுக்கு நன்றி கூறத்தான் அமெரிக்கா வந்துள்ளதாக ஜெலன்ஸ்கி நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார். (அ)

# தாய்வானில் போர்ப் பதற்றம்

## 39 போர் விமானங்களை அனுப்பி வைத்தது சீனா

தாய்பேய் சிற்றி, டிசெ. 24

சீனாவில் கொரோனா எழுச்சி அலையால் அல்லலுற்று வருகிற சூழலில் தாய்வானை நோக்கிச் சீனா 39 போர் விமானங்களையும், 3 போர்க் கப்பல்களையும் கடந்த 24 மணி நேரத்தில் அனுப்பி வைத்திருப்பதாக தாய்வான் இராணுவ, தகவல் வெளியிட்டுள்ளமை உலக அரங்கை அதிர வைத்துள்ளது.

கடந்த புதன்கிழமை காலை 6 மணியில் இருந்து நேற்று காலை 6 மணி விரையில் சீனாவின் 30 போர் விமானங்கள் தாய்வான் ஜலசந்தியின் நடுப்பகுதியைக் கடந்துள்ளன. இது அதிகாரபூர்வ எல்லையாக இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

சீனா அனுப்பிய போர் விமானங்களில் 'ஜே-16' ரக போர் விமானங்கள் 21 ம், 4 'எச்-6' குண்டுவீச்சு விமானங்களும், 2 முன் எச்சரிக்கை விமானங்களும் அடங்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து தாய்வான் கூறும்போது, தங்கள் நில அடிப்படையிலான ஏவுகணை அமைப்புகள் மற்றும் தங்கள் கடற்படை கப்பல்கள் மூலம் கண்காணித்ததாக தெரிவித்தது. சீனாவின் அடாவடியால் தாய்வானில் போர்ப் பதற்றமான சூழல் உருவாகி உள்ளது. (அ)



# எல். பி. எல். ரி -20 இறுதிப்போட்டி; கொழும்பு ஸ்ரார்ஸ் நுழைந்தது!



கொழும்பு, டிசெ. 24

கண்டி பல்கன்ஸ் அணிக்கு எதிராக கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இறுதிப் போட்டிக்கான இரண்டாவது தகுதிப் போட்டியில் 6 விக்கெட்களால் வெற்றி பெற்ற கொழும்பு ஸ்ரார்ஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

கண்டி பல்கன்ஸ் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 169 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்ரார்ஸ் அணி 18.5 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 169 ஓட்டங்களை பெற்று 6 விக்கெட்களால் அமோக வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் வனிந்து ஹசரங்க ஆட்டமிழக்காமல் 77 ஓட்டங்கள் குவித்து கண்டி பல்கன்ஸ் அணியைப் பலப்படுத்தியபோதிலும் அவரின் முயற்சி இறுதியில் வீண்போனது.

கொழும்பு ஸ்ரார்ஸின் வெற்றியில் கசுன் ராஜிதவின் சிறப்பான பந்துவீச்சு, சரித் அசலன்க, தினேஷ் சந்திமால், ரவி போபரா, அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோரின் துடுப்பாட்டம் முக்கிய பங்காற்றியது.

ஆரம்ப வீரர் நிஷான் மதுஷ்க 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோது மொத்த எண்ணிக்கை 13 ஓட்டங்களாக இருந்தது. இந்நிலையில், தினேஷ் சந்திமாலும் சரித் அசலன்கவும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 63 பந்துகளில் 90 ஓட்டங்களைப் பகிர்ந்து கொழும்பு ஸ்ரார்ஸ் அணிக்கு தெம்பூட்டினர்.

ஆனால், அவர்கள் இருவரும் டொமினிக் ட்ரேக்ஸ/ம் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டமிழந்தனர்.

தினேஷ் சந்திமால் 38 ஓட்டங்களையும் சரித் அசலங்க 40 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 64 ஓட்டங்களையும் பெற்றனர். டொமினிக் ட்ரேக்ஸ் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும் ரவி போபராவும் அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ/ம் பிரிக்கப்படாத 5ஆவது விக்கெட்டில் 25 பந்துகளில் 45 ஓட்டங்களைப் பகிர்ந்து கொழும்பு ஸ்ரார்ஸ் அணியின் வெற்றியை உறுதிசெய்தனர்.

ரவி போபரா 16 பந்துகளில் 29 ஓட்டங்களுடனும் மத்தியூஸ் 13 புந்துகளில் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

கண்டி பல்கன்ஸ் பந்துவீச்சில் கமிந்து மெண்டிஸ் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட கண்டி பெல்கன்ஸ் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 168 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது ஓவரிலேயே பதும் நிஸங்க (2), கண்டி பல்கன்ஸின் தடுப்பாட்ட நட்சத்திரம் அண்ட்றே ப்ளெச்சர் (0) ஆகிய இருவரும் ஆட்டமிழக்க கண்டி பல்கன்ஸ் ஆட்டம் கண்டது.

ஆனால், கமிந்து மெண்டிஸ் (23), அஷேன் பண்டார ஆகிய இருவரும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 3ஆவது விக்கெட்டில் 38 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

தொடர்ந்து அஷேன் பண்டாரவும் அணித் தலைவர் வனிந்து ஹசரங்க டி சில்வாவும் 4ஆவது விக்கெட்டில் 55 பந்துகளில் 92 பெறுமதிமிக்க ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர்.

அஷேன் பண்டார 40 ஓட்டங்களைப் பெற்றதுடன் வனிந்து ஹசரங்க 34 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 8 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட ஆட்டமிழக்காமல் 77 ஓட்டங்களைக் குவித்தார்.

பின்வரிசையில் கார்லோஸ் பிராத்வெயிட் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் கசுன் ராஜித 20 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை கைப்பற்றினார்.



# அணிக்கு திரும்பினார் இங்கிலாந்தின் ஆர்ச்சர்!

லண்டன், டிசெ. 24

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடருக்கான இங்கிலாந்து அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் விளையாடுகிறது. இந்தத் தொடருக்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இதில் வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் சேர்க்கப்பட்டுள்ளார். முழங்கை காயம் காரணமாக அவதிப்பட்டு வந்த ஜோப்ரா ஆர்ச்சர் கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச்சுக்கு பின்னர் ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கவில்லை. தற்போது முழு உடற்தகுதியுடன் அணிக்கு திரும்பியுள்ளார். இரு அணிகள் இடையிலான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஜனவரி 27ஆம் திகதி புளூம்ஃபோன்டைன் நகரில் நடைபெறுகிறது.

# ஐ. பி. எல் ஏலத்தில் சாம் கரன் சாதனை!

கொச்சி, டிசெ. 24

சாம்கரன்18.5 கோடி இந்திய ரூபாய்க்கும் பென் ஸ்ரோக்ஸை 16.5 கோடிக்கும் ஆசியின் கமரூன் கிறீன் 17.5 கோடிக்கும் ஏலம் எடுக்கப்பட்டுள்ளனர்.

ஐ. பி. எல். 2023இற்கான ஏலம் இந்தியாவின் கொச்சியில் நேற்று நடந்தது. முக்கிய வீரர்களின் ஏலத் தொகை - நேற்று மாலைவரை வெளியான தகவல் வருமாறு,




இங்கிலாந்து வீரர் பென் ஸ்ரோக்ஸை 16.25 கோடி இந்திய ரூபாய்க்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் அவுஸ்திரேலியாவின் கமரூன் கிறீனை 17.5 கோடி ரூபாய்க்கு மும்பை இந்தியன்ஸ் அணியும் ஏலம் எடுத்தன.

மேற்கிந்தியத் தீவுகளின் ஜசன் ஹோல்டரை 5.75 கோடி ரூபாய்க்கு ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் சிம்பாப்வேயின் சிகந்தர் ராசா 50 இலட்சம் ரூபாய்க்கு பஞ்சாப் கிங்ஸ் அணியும், ஓடன் ஸ்மித்தை 50 இலட்சம் ரூபாய்க்கு குஜராத் அணியும் வாங்கின.

அவுஸ்திரேலியாவின் சாம் கரனை பஞ்சாப் கிங்ஸ் 18.5 கோடி ரூபாயும் அஜிங்க்ய ரஹானேயை 50 இலட்சம் ரூபாய்க்கு சென்னை அணியும், இந்தியாவின் மயங்க் அகர்வாலை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 8.25 கோடி ரூபாய்க்கும், நியூசிலாந்தின் கேன் வில்லியம்சனை நிர்ணயிக்கப்பட்ட 2 கோடி ரூபாய்க்கும் குஜராத் அணியும் ஏலத்தில் எடுத்தன.

ஹென்றிக் கிளாசனை 5.25 கோடிக்கு ஹைதராபாத், ஹாரி புரூக்கை 13.25 கோடிக்கு ஹைதராபாத் அணிகள் விலைக்கு வாங்கின. (ஐ)



# உதைபந்தாட்ட தரவரிசை; ஆர்ஜென்ரீனா 2ஆம் இடம்!

சூரிச், டிசெ. 24

கட்டார் உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடர் முடிவடைந்த நிலையில் தரவரிசை பட்டியலை சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) வெளியிட்டுள்ளது.

இதில் உலக சம்பியனான ஆர்ஜென்ரீனா 3ஆவது இடத்தில் இருந்து 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. சம்பியன் பட்டம் வென்ற போதிலும் ஆர்ஜென்ரீனா அணியால் முதலிடத்தை பிடிக்க முடியாமல் போனது.

மாறாக உலகக் கிண்ணத் தொடரில் காலிறுதி சுற்றுடன் வெளியேறிய பிரேசில் அணியானது சமீபகால ஆண்டுகளின் செயல்திறன் அடிப்படையில் தரவரிசையில் முதலிடத்தை தக்க வைத்துக்கொண்டுள்ளது.

இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவிடம் வீழ்ந்த பிரான்ஸ் அணியும் ஓர் இடம் முன்னேறி 3ஆது இடத்தை பெற்றுள்ளது. லீக் சுற்றுடன் வெளியேறிய பெல்ஜியம் அணியானது இரு இடங்களை இழந்து 4ஆவது இடத்தில் உள்ளது.

காலிறுதி சுற்றில் தோல்வியடைந்த இங்கிலாந்து, நெதர்லாந்து அணிகள் முறையே 5 மற்றும் 6ஆவது இடத்தில் நீடிக்கின்றன. அரையிறுதியில் தோல்வியடைந்த குரோஷியா 5 இடங்கள் முன்னேறி 7ஆவது இடத்தை பிடித்துள்ளது.

உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறாத ஐரோப்பிய சம்பியனான இத்தாலி, தரவரிசையில் 8-வது இடம் வகிக்கிறது.

அரையிறுதிக்கு முன்னேறி சாதனை படைத்திருந்த மொராக்கோ 11 இடங்கள் முன்னேற்றம் கண்டு 11ஆவது இடத்தை அடைந்துள்ளது. (ஐ)

# சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளால் நாடு அழிவடையும் அபாய நிலைமை

## தேரர் பகிரங்க குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 24

**இந்த நாட்டின் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் நாட்டைக் கட்டியெழுப்ப விரும்பவில்லை எனவும், கட்சியை வளர்த்து நாட்டை அழிக்கவே விரும்புகின்றனர் எனவும் அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.**

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த தேசம் வீழ்ந்துள்ள பாதாளத்தில் இருந்து மீளக் கொண்டுவர கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 69 இலட்சம் மக்கள் வாக்களித்தனர்.

ஆனால் யாரோ செய்த தவறினால் அவர் வீட்டுக்குச் செல்ல நேரிட்டது. அதற்கு யார் பொறுப்பு என்று தெரியவில்லை.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை அதல பாதாளத்தில் இருந்து மீட்டெடுக்க முன்வந்தார்.

அந்த சவாலை ஏற்று படிப்படியாக நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வந்துள்ளார். ஆனால் அவருக்கு இன்னும் சிறிது கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

நாடு தற்போது பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலை நடத்துமாறு கோருகின்றனர். இந்த நேரத்தில் அதை செய்யக்கூடாது - என்றார். (அ)

# பாடசாலைக்கு அருகில் இயங்கிய விபசார விடுதி

## நான்கு பேர் கைது

கொழும்பு, டிசெ. 24

கண்டி பேராதனை வீதியில் உள்ள முன்னணி ஆண்கள் பாடசாலைக்கு அருகில் மசாஜ் மையம் என்ற பெயரில் நடத்தப்பட்ட விபசார விடுதியை சுற்றிவளைத்த மாத்தளை விசேட பொலிஸ் குழுவினர் மூன்று இளம் பெண்களையும் அதன் முகாமையாளரையும் கைது செய்துள்ளனர்.

மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரத்னவின் விசேட உத்தரவின் பேரில் மாத்தளை நகரில் பொலிஸ் குழுவொன்று மேற்கொண்ட சுற்றிவளைப்பில், குறித்த இடத்தில் மசாஜ் நிலையம் நடத்துவதற்கு அனுமதிப்பத்திரம் இல்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதம பொலிஸ் பரிசோதகர் மற்றும் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் உத்தியோகத்தர் உள்ளிட்ட பொலிஸ் குழுவொன்று இந்த நடவடிக்கையில் ஈடுபட்டது.

இதன்போது கைது செய்யப்பட்ட யுவதிகள் 25 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர்கள் குருநாகல், அனுராதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் வசிப்பவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# 7 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்தது சதொச

கொழும்பு, டிசெ. 24

எதிர்வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு லங்கா சதொச நிறுவனம் ஏழு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை விடுத்துள்ள லங்கா சதொச, பின்வரும் விலைக் குறைப்புக்கள் நேற்று முதல் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில்,

பெரிய வெங்காயம் - ஒரு கிலோ 185.00 ரூபா (5.00 ரூபாவால் குறைப்பு)

சிவப்பு பருப்பு - ஒரு கிலோ 374.00 ரூபா ( 11.00 ரூபாவால் குறைப்பு)

ரின் மீன் (உள்ளூர்) - 425 கிராம் 475.00 ரூபா (15.00 ரூபாவால் குறைப்பு)

மிளகாய் - ஒரு கிலோ 1780.00 ரூபா (15.00 ரூபாவால் குறைப்பு)

நெத்தலி - ஒரு கிலோ 1,100.00 ரூபா(50.00 ரூபாவால் குறைப்பு)

வெள்ளை சீனி - ஒரு கிலோ 218.00 ரூபா (6.00 ரூபாவால் குறைப்பு)

உருளைக்கிழங்கு - ஒரு கிலோ 285.00 ரூபா (5.00 ரூபாவால் குறைப்பு)

(அ)

# மூடப்படுகிறது நுரைச்சோலை மின் நிலையத்தின் ஒரு பகுதி!

கொழும்பு, டிசெ. 24

நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களில் ஒன்றை நேற்று வெள்ளிக்கிழமை முதல் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி இருப்புக்களை நிர்வகிப்பதற்கும், திட்டமிடப்பட்ட பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக உரிய பிரிவை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, தற்போதைய 2 மணித்தியால 20 நிமிட தினசரி மின்வெட்டில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (அ)

# நாட்டில் 100 இற்கும் மேற்பட்ட மருந்துகளுக்குத் தட்டுப்பாடு!

கொழும்பு, டிசெ. 24

நாட்டில் 100 இற்கும் மேற்பட்ட மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொடுப்பனவுகள் தாமதமாக வழங்கப்படுகின்றமை காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறித்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், முடிந்தவரை தேவைக்கு ஏற்ப மருந்துகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# அதிவேக நெடுஞ்சாலையில் லொறி-பஸ் மோதி விபத்து!

## 12 பேருக்கு காயம்



கொழும்பு, டிசெ. 24

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் குருந்துகஹஹெதெக்ம மற்றும் பத்தேகம இடையே 73/1 கிலோமீற்றர் தூணுக்கு அருகில் சரக்கு லொறியொன்றும் பஸ்ஸொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த 12 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் எட்டு பேர் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கும் நால்வர் எல்பிட்டிய வைத்தியசாலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கி நுகர்வுப் பொருட்களை ஏற்றிச் சென்ற லொறியொன்றும், அதே முனையில் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸொன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

# மாணவருக்கு போதைப்பொருள் விற்பனை செய்த 47 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 24

பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த 47 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரைக்கு அமையவே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாணத்தில் உள்ள 149 பாடசாலைகளை உள்ளடக்கி இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 01 கிலோ 260 கிராம் மாவா, 09 கிராம் 630 மில்லிகிராம் ஹெரோயின், 02 கிராம் 38 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 207 கிராம் 590 மில்லி கிராம் கஞ்சா ஆகியன கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, இந்த நடவடிக்கையின்போது கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 17 வயது சிறுவன் ஒருவன் மிரிஹான பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரச பாடசாலைக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தினசரி மின்வெட்டு அதிகரிக்கப்படாது

கொழும்பு, டிசெ. 24

தினசரி மின்வெட்டு எந்த வகையிலும் அதிகரிக்கப்படாது என மின்சார சபை தெரிவித்துள்ளது.

நிலக்கரியைப் பெறுவதில் சிக்கல் நிலை காணப்பட்டாலும் நீண்ட கால மின்வெட்டு இன்றி மின்சாரம் வழங்கப்படும் என மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் அன்ட்ரூ நவமணி தெரிவித்தார்.

இவ்வாறானதொரு நிலையில் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதற்கான மாற்று வழிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

## அரசாங்கத்து....

மன்னாரில் உள்ள அவரின் பணிமனையில் நேற்று வெள்ளிக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்போது பரபரப்பாக பேசப்படும் விடயம் ஜனாதிபதியின் இந்த பேச்சு முயற்சி சம்பந்தமாகவே. எங்களைப் பொறுத்தமட்டில் 31ஆம் திகதி வரை கால அவகாசம் கொடுத்திருந்தோம். அதில் இராணுவம் ஏனைய திணைக்களங்கள் பிடித்திருக்கின்ற நிலங்கள் பேச்சு ஆரம்பமாகும் நாளிலிருந்து நிலங்கள் அபகரிக்கும் செயல்பாடுகளை நிறுத்த வேண்டும் என்றும் ஒரு தீர்மானமாக அதைச் சொல்லி இருந்தோம்.

அந்த அடிப்படையில் ஜனாதிபதி இந்த 31ஆம் திகதி வரையில் கால அவகாசம் கேட்டிருந்தார். அந்த வகையில் இராணுவம் எந்தெந்த இடங்களை விடப் போகிறது என்ற கேள்வி இருக்கிறது. பேச்சின்போது நாங்களும் இராணுவம் கைப்பற்றிய சில இடங்களை வரைமுறையோடு எத்தனை ஏக்கர் எங்கெங்கு பிடிக்கப்பட்டு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட இருக்கிறோம்.

இதேபோல் வயல் காணிகளையும் மக்களின் வீட்டு காணிகளையும் எல்லைகளை இராணுவம் போடுகின்ற ஒரு துர்பாக்கிய நிலை காணப்படுகிறது. பேச்சு என்பது அவசரப்பட்டு செல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. பேச்சு என்பது அனைவரையும் ஒன்று திரட்டுகின்ற அல்லது ஒற்றுமைப்படுத்துகின்ற செயல்பாடாக அமைய வேண்டும். ஆனால், இந்த 31 ஆம் திகதி வரை எந்த ஒரு திருப்பு முனையும் இல்லாத நிலை ஜனாதிபதி அவர்கள் அதில் எதிர்வரும் 10 -13 வரை திகதிகளை நிர்ணயம் செய்திருக்கின்றார். இது எவ்வாறு சாத்தியமாகும் என்பது தெரியவில்லை. 31ஆம் திகதிக்கு முன்பு நாங்கள் வைத்த கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் நாங்கள் ஆணித்தரமாக இருக்கின்றோம்.

அரசியல் கைதிகள் 5 பேர் மட்டுமே விடுதலை செய்ய முடியும் என்று கூறுவது நல்லபடியாக இருந்தாலும் அனைத்து அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். குறிப்பாக தீர்ப்பு சொல்லப்பட்டு வெளியில் வந்தவர்களுக்கு மீண்டும் வழக்கு போடப்படும் ஒரு துர்பாக்கிய நிலை இருக்கிறது. ஜனாதிபதி இதில் கவனம் எடுத்து அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்கு ஜனாதிபதியால் முடியும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. ஆகவே, இந்த விடயத்தில் அரசாங்கம் மெத்தனப் போக்கையே காட்டுகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு முந்தைய நிதி அமைச்சர் ஒரு லட்சம் என்றும் இந்த நிதி அமைச்சர் 2 இலட்சம் தருவதாக கூறுகிறார்கள். எங்களுடைய உறவுகளின் பெறுமதி என்பது வெறும் 2 இலட்சம்தானா ? அவை நியாயமாக விசாரிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு என்ன நடந்தது அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது பற்றி அரசாங்கம் உறவுகளுக்கு தெரிவிக்க வேண்டும். இவ்வாறு பிரச்னைகள் இருக்கையில் நாங்கள் உடனடியாக சென்று இந்த பேச்சில் கலந்து கொண்டு இதனை மலிவுபடுத்துகின்ற செயல்பாட்டை செய்யக்கூடாது என்பது என்னுடைய கருத்து.

மேலும் எங்களுடைய போராளிகள் இயக்கங்கள் அனைத்தும் உருவாகியது இந்த நிலத்தை காப்பாற்றுவதற்காக. அதற்காக பல போராளிகள் பல மக்கள் உயிர் தியாகம் செய்திருக்கின்றார்கள். ஆகவே, நிலங்கள் விடுவிக்கப்படாத வரைக்கும் பேச்சு என்பது அர்த்தமற்று போகும்.

அவ்வாறு பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்ட உடன் பிடிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால், இது எப்படி சாத்தியம் எவ்வாறு அமையப் போகிறது என்பது தெரியாது. ஆனால், இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் தமிழ் தரப்பு ஆகிய நாங்கள் சாதிக்க முடியும். பேச்சு விடயத்தில் நாங்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எங்களுடைய செயல்பாடுகளின்படி பேச்சு என்பது இந்தியாவின் அனுசரணையோடு ஏனைய நாடுகளின் மேற்பார்வையில் நடைபெற வேண்டும் என்பதும் எங்களுடைய கோரிக்கையாக நாங்கள் முன்வைத்திருக்கிறோம். அந்த வகையில் சில பேர் கேட்கிறார்கள் பேச்சு ஆரம்பத்தில் ஏன் இதைச் சொல்லவில்லை என்று? ஆனால், நான் அதை சொல்லாததற்கான காரணம் ஜனாதிபதியின் நிகழ்ச்சித் திட்டம் என்ன என்பது எங்களுக்கு தெரியவில்லை.

ஆனால், இப்போது நாங்கள் ஒரு கால வரையறையை கொடுத்திருக்கின்றோம். அதன் அடிப்படையில் அவை நடைபெற வேண்டும் ஜனாதிபதி நல்ல நோக்கத்துக்காக இதனை கையில் எடுத்துள்ளாரா? அல்லது பொருளாதாரப் பிரச்னைகளை மேம்படுத்துவதற்காக செய்கிறாரா என்றொரு கேள்வி இருக்கிறது. ஆனாலும் இந்த சந்தர்ப்பங்களில் வாய்ப்பை நாங்கள் நழுவ விட்டு விடக்கூடாது. ஆகவே தமிழர் தரப்பு எல்லோருமாக சேர்ந்து முடிவுகளை எடுக்கும் பட்சத்தில் எங்களுடைய நிபந்தனைகளையும் எங்களுடைய கோரிக்கைகளையும் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பாக அமையும் - என்றார். (ஐ)

## வியட்நாமிலுள்ள....

தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கோரிக்கைக்கு இணங்க 302 இலங்கையர்களுக்கும் உதவியமைக்காகவும் அந்த அமைப்புக்கு அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார். (ஐ)

## பட்டினியால்....

இது குறித்த தகவல்களை மூதூர் பாரதிபுரம் - கிளிவெட்டியில் உள்ள மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் சமூக ஊடகங்கள் ஊடாக வெளியிட்டுள்ளனர்.

அந்தப் பதிவில், மூதூர் - 64 ஆம் கட்டை, சகாயபுரம் கிராமத்தில் மிகவும் வறுமைநிலையில் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவர்களில் தந்தையை இழந்து தாயுடன் வாழ்ந்துவந்த சிறுவன் ராமராஜன் குடும்பமும் ஒன்றாகும்.

இச்சிறுவன் அப்பகுதியில் உள்ள ஆலயத்துக்கு சென்று தன்னால் முடிந்த பணிகளை செய்வான். அறநெறி பாடசாலைக்கு ஆர்வத்துடன் வருவான். எனினும், வயதுக்கு ஏற்ற உடல் வளர்ச்சி இல்லை. இந்த நிலையில் நாங்கள் முடிந்தவரை அடிக்கடி சிறு உதவிகளை சிறுவன் குடும்பத்துக்கு செய்து வருகின்றோம். கடந்தவாரம் உண்ண உணவின்றி பல வீனமாக இருப்பதாகவும் அவர்களின் தற்காலிக வீட்டில் உள்ளேயும் வெளியேயும் மழை வெள்ள நீர் தேங்கி நிற்பதாகவும் எமது பணியாளர்களால் படத்துடன் உறுதிபடுத்தப்பட்டது.

இதனையடுத்து உடனடியாக சமூக நலன் விரும்பி விநோத் என்பவரிடம் இருந்து நிதியை பெற்று ஒரு மாதகாலத்துக்குப் போதுமான 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொருள்களை பெற்று கொடுத்தோம். நாங்கள் சிறுவனின் நிலை அறிந்து அவரின் வீட்டுக்கு சென்றபோது அவர் எழுந்திருக்க முடியாத நிலையில் சோர்ந்து காணபட்டார். அவர்களின் வீட்டுக்குள் மழை நீர் வழிந்தோடியது. வீட்டுக்குள்ளே போக முடியாதபடி சுற்றிவர நீர் தேங்கிநிற்பதையும் காணமுடிந்தது.

இந்த நிலைகண்டு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினேன். இனிமேலாவது இருக்கின்ற சிறுவர்களை பாதுகாக்க அரச மற்றும் அரச சார்பற்ற அதிகாரிகள் விரைந்து செயல்பட வேண்டும்.

சகாயபுரம் கிராமம் போன்று பல கிராமங்களில் வறுமையின் கோரப் பிடியில் சிக்கி பெருமளவு மக்கள் கவனிப்பாரற்று உள்ளனர். இவ்வாறனவர்களுக்கு நாம் உதவி வருகிறோம். அதிகாரிகளும் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கம் சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## யாழ்ப்பாணம்....

போட்டியில் யாழ்ப்பாணம் கிங்ஸ் கொழும்பு ஸ்ரார்ஸ் அணியை எதிர்கொண்டது.

164 ஓட்டங்கள் என்ற ஓரளவு கடினமான இலக்கை விரட்டியது யாழ்ப்பாணம் கிங்ஸ். தொடக்க வீரர்களான ரஹ்முனுல்லா 36, அவிஸ்க பெர்னாண்டோ 50 ஓட்டங்களை குவித்தனர். இதேபோல் நான்காவது வீரராக களமிறங்கிய சதீர சமரவிக்கிரம 44 ஓட்டங்களை குவித்தார்.

பின்னர் வந்தவர்கள் சோபிக்காத போதும் யாழ்ப்பாணம் கிங்ஸ் 19.2 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 164 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்ரார்ஸ் அணிக்கு தினேஷ் சந்திமால் 49, சரித் அசலங்க 31, ரவி போபரா ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களை குவித்தனர். இதனால்,அந்த அணி 5 விக்கெட்களை மட்டும் இழந்து 163 ஓட்டங்களை எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டியின் நாயகனாக அவிஸ்க பெர்னாண்டோவும் தொடர் நாயகனாக சதீர சமரவிக்கிரமவும் தெரிவாகினர். (ஐ)

## திருத்தப்பட்ட....

நபர் வருமான வரியில் மாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, ஒரு இலட்சம் ரூபாய் முதல் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை சம்பளம் பெறுபவர்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாயும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதல் 2 இலட்சம் ரூபாய் வரை வருமானம் பெறுவோருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாயும் 2 இலட்சம் ரூபாய் முதல் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் பெறுபவர்கள் 21 ஆயிரம் ரூபாயும் வரியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதேபோல், 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதல் 3 இலட்சம் ரூபாய் வரை வருமானம் பெறுவோர் 35 ஆயிரம் ரூபாயும் 3 இலட்சம் ரூபாய் முதல் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் பெறுபவர்கள் 52 ஆயிரத்து 500 ரூபாயும், 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதல் 4 இலட்சம் ரூபாய் வரை வருமானம் பெறுவோர் 70 ஆயிரத்து 500 ரூபாயும் 10 இலட்சம் ரூபாய் சம்பளம் என்றால் 2 இலட்சத்து 86 ஆயிரத்து 500 ரூபாயும் வரி அறிவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 16 அரசியல்....

குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையோர் என்று கூறப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஒரு சிலரே சிறையில் உள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

நேற்று அவர் தனது அமைச்சில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் மற்றும் விடுதலை புலிகள் போராளிகள் சட்டம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் உள்ள 8 விடுதலைப் புலிகள் போராளிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இவர்களின் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் கீழ் சிறையில் பல ஆண்டுகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 16 பேரின் வழக்குகளை விரைவாக விசாரணைக்கு எடுத்து, அவற்றை நிறைவு செய்யுமாறு நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளேன்.

தலதா மாளிகை, மத்திய வங்கி மீது குண்டுத்தாக்குதல், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்த போது அவரையும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவையும் இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் சிறைகளில் உள்ளனர். இவர்களை விடுதலை செய்வதாயின் பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து ஆலோசனை கோரப்பட வேண்டும். இவ்விடயம் தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஐஸ் போதை....

கையில் 74 சதவீதமானோர் போதைப் பொருள் வியாபாரம் மற்றும் பாவனையுடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர் கூறினார்.

நீதி அமைச்சில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவற்றை அவர் தெரிவித்தார். மேலும்,

போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் மரண தண்டனையை நடைமுறைப் படுத்துவது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## இனப்....

தமிழ் கட்சிகளும் என்மீது நம்பிக்கை வைக்கவில்லை. பழையதைப் பேசுவது இப்போது உகந்ததல்ல. அனைவரும் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்றே விரும்புகிறேன்.

ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர். அதனால்தான் நான் அவரை பிரதமராக நியமித்தேன். ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியவுடன் அவரை பாராளுமன்றம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யும் என்று நினைத்தேன். அது போன்றே நடந்தது.

ஜனாதிபதி சர்வகட்சிகளுடன் பேசி அரசியல் தீரவை காண்பார் என்று நம்புகிறேன். அது நடந்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது - என்றும் கூறினார்.

## நாயுடன்....

களை சந்திப்பதற்கு சில மணி நேரங்கள் முன்னதாக ஜனாதிபதியின் ஆலோசகர் பதவியிலிருந்து அவர் விலகினார்.

மாரசிங்கவை சமூகவலைதளம் மூலம் தொடர்பு கொண்டு காதலித்து அவருடன் இரு வருடங்கள் ஒன்றாக வாழ்ந்தவர் அதர்சா கரடனா என்பவர். இவர் வளர்த்த நாயையே அவர் புணர்ந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேசமயம், மாரசிங்கவின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றம் இருந்ததாகவும் தன்னை உடல்ரீதியாக மிகவும் துன்புறுத்தினார் என்றும் அதர்சா குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதர்சா கரடனா காலிமுகத்திடலில் நடந்த அறகலயவில் பங்கேற்ற முன்னணி போராட்டக்காரர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அம்புலன்ஸ்....

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மல்லாவியிலிருந்து சிறுநீரக நோயாளி ஒருவரை அவசர சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் கொண்டு சென்றது. அந்த சமயம், தனது செய்கை நிலத்தை பார்வையிட்டு, வீதியின் மறுபுறத்துக்கு மோட்டார் சைக்கிளில் கடக்க முற்பட்டவரை அதிவேகமாக வந்த அம்புலன்ஸ் மோதியது.


அம்புலன்ஸின் சமிக்ஞையை அவதானிக்காது சடுதியாக வீதியை கடக்க முற்பட்டமையால் இந்த விபத்து இடம்பெற்றதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். விபத்தையடுத்து அம்புலன்ஸில் சென்ற நோயாளர், மருத்துவர் ஆகியோர் மற்றோர் அம்புலன்ஸ் வண்டியில் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். விபத்தில் படுகாயமடைந்த நபர் 1990 இலக்க அவசர சேவை ஊடாக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும், மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்திலேயே விபத்தில் காயமடைந்தவர் உயிரிழந்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கப்பல் உரிமையாளர்களாக மாறி நாட்டின் வளர்ச்சிக்கு உதவுங்கள்!

## புலம்பெயர் இலங்கையருக் நிமல் சிறிபால டி சில்வா அழை



கொழும்பு, டிசெ. 24

**கப்பல்களுக்கு உரிமையாளர்களாக மாறி இலங்கையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யுமாறு துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, வெளிநாடுகளில் வாழும் செல்வந்த இலங்கையர்களுக்கு பகிரங்க அழைப்பை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது சிறந்த முதலீடு. இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திடம் இரண்டு கப்பல்கள் மாத்திரமே இருக்கின்றன. மேலும் கப்பல்களை கொள்வனவு செய்ய இலங்கையிடம் பணமில்லை.

இலங்கையில் பல்வேறு தொழில்களுக்கு உரிமையாளர்கள் இருக்கின்ற போதிலும் கப்பல் உரிமையாளர்கள் இல்லை. வெளிநாட்டு வங்கிகளில் பெருந்தொகை பணத்தை வைப்புச் செய்துள்ள இலங்கையர்களுக்கு இது சிறந்த சந்தர்ப்பம். இலங்கையில் நீர்வழி போக்குவரத்துக்கு மிகப் பெரிய வரவேற்புள்ளது

கப்பல் மாத்திரமல்ல ஏனைய நீர் வழி போக்குவரத்து சாதனங்களை கொள்வனவு செய்து, இலங்கையில் நீர்வழி போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடியும். இப்படியான நடவடிக்கைகளுக்கு நாட்டின் மிகப் பெரிய வரவேற்பு உள்ளது-என்றார். (அ)

# வசந்த முதலிகே வைத்தியசாலையில்

கொழும்பு, டிசெ. 24

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே நேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக சிறைச்சாலைகள் பேச்சாளர் தெரிவித்தார்.

முதலிகே ஒகஸ்ட் 19ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அதற்கமைய, வசந்த முதலிகேயை எதிர்வரும் ஜனவரி மாதம் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையிலேயே அவர் நேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# இலங்கையில் தங்கியுள்ள 912 வெளிநாட்டு அகதிகள்

கொழும்பு, டிசெ. 24

இலங்கையில் 912 வெளிநாட்டவர்கள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அகதிகளாக தங்கியிருப்பதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பாகிஸ்தான் பிரஜைகள். 703 பாகிஸ்தான் பிரஜைகள் இலங்கையில் தங்கியுள்ளனர்.

இவர்களை தவிர ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 113 பேர், 24 ஈரானியர், 6 பாலஸ்தீன பிரஜைகள், 4 சூடானியர், 15 ஏமன் பிரஜைகள், 35 மியன்மார் பிஜைகள், எரித்திரியா மற்றும் சோமாலிய நாடுகளை சேர்ந்த தலா ஒருவர் என மொத்தமாக 912 வெளிநாட்டவர்கள் இலங்கையில் அகதிகளாக தங்கியுள்ளனர்.

இவர்கள் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகத்தின் கண்காணிப்பின் கீழ் இவ்வாறு இலங்கையில் தங்கியுள்ளனர் எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மற்றொரு யூரியா கப்பல் நாட்டுக்கு!

கொழும்பு, டிசெ. 24

28 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் தாங்கிய மற்றுமொரு கப்பல் நேற்று அதிகாலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

உலக வங்கியின் நிதி உதவியில் கொள்வனவு செய்யப்படும் இந்த உரத் தொகையானது, மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

பெரும்போகத்தில், விவசாயிகளுக்கு அவசியமான யூரியா உரத்தைக் கொள்வனவு செய்வதற்காக, உலக வங்கியால், 110 மில்லியன் டொலர் நிதி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில், ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# சிகிரியா குன்றில் ஏற 11,000 ரூபாய் கட்டணம்

கொழும்பு, டிசெ. 24

சிகிரியா குன்றின் மேல் ஏறுவதற்கு வெளிநாட்டவர் ஒருவரிடம் இருந்து 11 ஆயிரம் ரூபாய் அறவிடப்படுவதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக வெளிநாட்டவர்கள் பலர் சிகிரியா குன்றில் ஏறுவதை தவிர்த்து வருவதாக சிகிரிய பிரதேச சுற்றுலா வழிகாட்டிகள் தெரிவிக்கின்றனர். டிசெம்பர் மாதம் சிறந்த சுற்றுலா மாதமாக இருந்தாலும் வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வரவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ஐ)

# கொத்தலாவல பல்கலை வேந்தராக ஜெனரல் கோட்டேகொட நியமனம்!

கொழும்பு, டிசெ. 24

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராக ஜெனரல் (ஓய்வுபெற்ற) எஸ். எச். எஸ். கோட்டேகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராக ஓய்வுபெற்ற ஜெனரல் எஸ். எச். எஸ். கோட்டேகொடவை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நியமித்துள்ளார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 1981ஆம் ஆண்டுக்கான 68ஆம் இலக்க சட்டத்தின் 7பி (1) சரத்துக்கு அமையவே (திருத்தப்பட்டது) ஜனாதிபதி இந்த நியமனத்தை மேற்கொண்டுள்ளார்.

இவர் ஐந்தாண்டு காலப் பகுதிக்காக இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொழும்புத்துறையில் படகுக்கு தீ வைப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 24

கொழும்புத்துறை - உதயபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் படகுக்கு தீ வைத்து எரியூட்டப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் படகுக்கு தீ வைத்ததுடன் மீன்பிடி உபகரணங்களையும் வாளால் வெட்டி சேதப்படுத்தியிருந்தனர்.

சேதப்படுத்திய காட்சி அங்கு வீடு ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமெராவில் பதிவாகியிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து தேர்தல்கள் குழு கலந்தாய்வு!

கொழும்பு, டிசெ. 24

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான கலந்துரையாடலுக்காக அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்து பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களையும் தேர்தல்கள் ஆணைக்குழு கொழும்புக்கு அழைத்தது.

ராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இந்த கலந்துரையாடல் ஆரம்பமானது. தேர்தல் நடத்துவது குறித்த அறிவிப்பு இந்த மாத கடைசி வாரத்தில் வெளியிடப்படும் என்று ஆணைக்குழு இந்த மாத தொடக்கத்தில் தெரிவித்திருந்தது.

சான்றளிக்கப்பட்ட 2022 வாக்காளர் பதிவேட்டின் அடிப்படையில் 2023 உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

341 உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகள் தேர்தலில் தெரிவு செய்யப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஓமானில் பிரித் ஓதப்பட்ட விவகாரம் குற்றச்சாட்டை மறுக்கிறது தூதரகம்!

கொழும்பு, டிசெ. 24

ஓமானில் உள்ள இலங்கை தூதரக வளாகத்தில் நடைபெற்ற பிரித் ஓதுதல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை தூதரகம், மறுத்துள்ளது.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 16 ஆம் திகதி தூதரக வளாகத்தில் நடைபெற்ற பிரித் ஓதுதல் நிகழ்வு தொடர்பிலேயே இந்த மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஓமானில் உள்ள ஸ்ரீ சம்புத்த விகாரை ஆலயத்தின் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரித் ஓதுதல் நிகழ்வுச் செலவுகள் தொடர்பான குற்றச்சாட்டுகளே தூதரகம் மீது சுமத்தப்பட்டிருந்தன.

எனினும் இந்த நிகழ்வு தொடர்பான அனைத்து செலவுகளையும் ஸ்ரீ சம்புத்த விகாரை ஆலயத்தின் குழுவினரே ஏற்றுக்கொண்டதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

தூதரக வளாகத்தில் "பிரித் மண்டபத்தை" நிறுவுவதற்கு மாத்திரமே தூதரகத்தின் உதவி வழங்கப்பட்டதாகவும் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம், தூதரகம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன இந்த நிகழ்வுக்கு எந்த நிதியையும் ஒதுக்கவில்லை என்றும் ஓமானில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஓமானில் நிர்க்கதியாகியுள்ள, இலங்கையைச் சேர்ந்த 283 வீட்டுப் பணிப்பெண்களை திருப்பி அனுப்ப ஓமன் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

இதன்படி நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் முறையே 58 மற்றும் 22 பெண் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.